750

ஜகன்மோகினி

ஆசிரியை

வை.மு.கோதைநாயகி அம்மாள்

SL
ஜ211 ,N122JM
N36.13-7.
182989

…ன்மோகினி" ஆபீஸ்
…8: தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை

மலர் 13
இதழ் 7

ஏஜண்டுகள் தேவை

ஜகன் மோகினி

ஆசிரியை : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

13-வது ஆண்டு ஆரம்பம்

மாதாந்த நாவல் சஞ்சிகை.

ஜனவரி 1936

ஆங்கில மாதம் முதல் தேதியன்று வெளி வரும்.

எல்லா பத்திரிகை விற்போரிடமும் கிடைக்கும்.

வருஷ சந்தா ரூ. 1-8

ஜீவிய சந்தா ரூ. 25

தனிப்பிரதி அணா 2

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்.

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப் படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

பங்கு 1 நளினசேகரன் வீரவஸந்தா 3 வைரங்கள் படாடோபத்தின் பரிபவம் பிச்சைக்காரக் குடும்பம்	இனாமாக நாவல்கள் வேண்டுமா ?	பங்கு 2 பரிமளகேசவன் உத்தமசீலன் கதம்பமாலை சுகந்தபுஷ்பம் கோபாலரத்னம் புத்தியே புதையல்
பங்கு 3 சௌரீமுகுந்தன் ஸாரமதி சோதனையின் கொடுமை	'எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பண மனுப்புகிறீர்களோ, அத்தனைவது நம்பர் பங்கி லுள்ள புத்தகங்களில்	பங்கு 4 தியாகக்கொடி நவநீதகிருஷ்ணன் சாமளநாதன் ருக்மிணீகாந்தன் மங்களபாரதி
பங்கு 5 வைதேகி பத்மசுந்தரன் ராதாமணி காதலின் கனி சாருலோசனை	ஒன்று இனாம்	மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாம்.

"ஜகன்மோகினி ஆபீஸ்" திருவல்லிக்கேணி.

6-வது அதிகாரம்

நிர்மல இதயம்—துர்மதி உதயம்

6-AUG 1936 MADRAS

உலகத்தில் மக்கள் தம் தம் பிழைப்பிற்கு ஆதாரம் தேடுவதில் ஆவல் கொண்டு தவிப்பது வியப் பல்லவே! கல்யாணியம்மாளின் ஆவலோ கட்டுக்கடங் காத தாகிவிட்டது. தன் மகனுக்கு ஏதேனுமொரு நிரந்தரமான வேலை கிடைத்துவிட்டதென்ற சொல்லை என்று கேட்போம் என்ற பெரிய எதிர்பார்ப்பும் ஆத்திரமும் தினே தினே அதிகரித்து கடவுளை சதா வேண்டிக்கொண்டே இருப்பாள்.

அன்று மோஹன் இக் கார்யாலயத்திற்குச் சென்றது அவளுக்குத் தெரியும்; ஆதலால் வேலை கிடைத்துவிட்டதென்ற சந்தோஷச் செய்தியுடன் மோஹன் வருவான் என்று எதிர் பார்த் துக் கொண்டிருந்தாள்.

182989.

மோஹன் பத்திரிகாலயத்திற்குச் சென்றதும் முன் அதிகா ரத்தின் இறுதியில் நடந்த அதி கொடுமையானதும் பயங்கரமானது மான சம்பவத்தினுல் மனம் பதறிப்போய் "கடவுளே! கடவுளே" என்று கூவியவாறு நின்ருனேயன்றி, பதிலுக்குக் கையை ஓங்கவோ, திட்டவோ இல்லை. இவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளியும் போகாமையினுல் பின்னும் ஆத்திரமடைந்து மீண்டும் இரண்டடி பலமாக சந்தானக்ருஷ்ணனே விட்டான்.

தர்மலிங்கம் தன் ஆபீஸ் ரூமில் உட்கார்ந்துகொண்டு பத்திரிகை வேலையை கவனித்துக் கொண்டிருக்கையில் 'கடவுளே! கடவுளே!' என்று மோஹன் கூவியதையும், இவ் விருவரும் ஆத்திரமாகப் பேசு வதையும் செவியுற்று சடக்கென எழுந்து வெளியில் வந்தார். தன்

JL
5021/N32.5b1
M36.13.7

னறைக் கதவருகிலேயே நின்று இந்த கோரக் காட்சியைக் கண்ணுற்று மிக்க ஆத்திரமும் மனக்கொதிப்பும் அடைந்து "என்ன! என்ன! ஏன் இவனை இம்சிக்கின்றீர்கள்? க்ருஷ்ண! என்னடா செய்தி? நாகலிங்கம். நில்லு. நில்லு'' என்று கூறிக்கொண்டே எதிரில் சென்று தடுத்தார்.

வழக்கம்போல தர்மலிங்கம் அன்றும் மெத்தை ஹாலுக்குச் சென்று ஓய்வெடுத்துக்கொண்டிருப்பதாக இவர்கள் நினைத்ததற்கு மாறாக அன்று தர்மலிங்கத்திற்கு அதிக வேலை இருந்ததாலும் முக்கிய விஷயங்களைத் தானே பரிசிலனை செய்தாகவேண்டி இருந்ததாலும் இவ்விடத்திலேயே இருந்ததை இவர்களறியவில்லை யாகையால் அவரைக் கண்டதும் நாகலிங்கம் உண்மையில் நடு நடுங்கிவிட்டான். க்ருஷ்ணனும் சிறிது திடுக்கிட்டான்.

எனினும் தன் மூர்க்க பிடிவாதத்தை விடாமல் கிருஷ்ணன் ''என்னவோ! இந்த அயோக்யன் யாரோ தெரியவில்லை இவன் வெகு சாதுவைப்போல நடித்து நேரே உங்கள் அறைக்கே ஒருவருடைய உத்திரவையும் பெறாது துணிச்சலாக எதையோ கொள்ளையடிக்கச் சென்றதை நாங்கள் பார்த்துவிட்டதால் தடுத்து உதைத்தனுப்புகிறோம். இதுதான் விஷயம்'' என்றான்.

இவன் முடிப்பதற்குள் மோஹன் கண்ணீர் பெருகியவாறு "ப்ரபோ! கடவுள் மீது ஆணையாக திருட வந்தனல்ல. என் கனவிலும் அம்மாதிரி நினைப்பவனல்ல. இங்குள்ள மற்ற வேலையாட்களைக் கேளுங்கள். நான் இக் காரியாலயத்தில் ஒரு ஊழியக்காரனை ஏற்றுக்கொள்வீர்களா வென்று ஏங்கி அடிக்கடி வந்து விசாரித்துக் கொண்டு போகிறேன். இதோ இவரும் என்னைப் பலதரம் பார்த்திருக்கிறார். இன்றும் நான் வேலைக்காரர்களை எல்லாம் கேட்டுக் கொண்டுதான் வந்தேன். அனியர்யமாக இருவரும் என்னை உபத்திரவம் செய்து அடித்து இம்சிக்கிறார்கள்.'' என்று விசனித்துக் கொண்டே கூறினன்.

இதைக் கேட்ட தர்மலிங்கத்திற்கு மனம் மிகவும் இளகியது. மற்ற ஆட்களையழைத்து விசாரித்தார். மோஹன் சொல்லியது

போலவே அவர்களும் தெரிவித்தார்கள். தர்மலிங்கம் க்ருஷ்ணனைக் கண்டித்து வெகுவாய் புத்திமதிகள் கூறியனுப்பிவிட்டு நாகலிங்கத்தைப் பார்த்து அனியாயமாக ஓர் மனிதனை வெறி பிடித்ததுபோல நடத்தியது மிகவும் தவறாகும். இச் செய்கை உன்னை மாத்திரமல்ல; முதலாளியாகிய என்னையும் இப் பத்திரிகாலயத்தையுங் கூட சேர்த்துத் தாக்கும். ஒரு மனிதன் வந்தால் என்ன ஏது என்று விசாரிக்காமல் அதிலும் இரண்டொரு தடவைகள் பார்த்த மனிதனை இவ்விதம் த்ரோகம் செய்து அடிப்பது மிக்க கேவலமாகும்.

இச்செய்தி வெளியில் தெரிந்தால் ஜனங்கள் என்ன நினைப்பார்கள். இப் பத்திரிகாலயத்தின் எஜமானரே எல்லோரையும் அதிலும் ஏழைகளை இப்படித்தான் அடித்துத் துரத்துகிறாரோ என்னவோ என்ற அபிப்ராயமல்லவோ உண்டாகும். சேச்சே! இம்மாதிரி செய்தது—ஓர் ஏழைச் சிறுவனை அடித்துக் கண்கலங்கச் செய்தது—பெருங் குற்றமாகும். இத்தகைய குணத்துடன் நீ வேலை செய்தால் இனி இந்த இடத்திலிருக்க உனக்கு யோக்யதை இல்லை.'' என்று சற்று கடுமையான தொனியுடனேயே கூறினார்.

நாகலிங்கம் பெரிய தந்திரப்புலி; காரியவாதி. சுயநலப்ரியன் ஆகையினால் தான் எசகு பிசகாக அகப்பட்டுக்கொண்டுவிட்டதால் இனி மறைக்கவும் முடியாதாகையினால் சற்று பணிந்தேபோய் "எஜமான்! என்னை மன்னிக்கவேண்டும். இன்று எனக்கும் அதிக வேலை இருப்பதால் வீட்டிற்குப் போகவில்லை. உங்கள் மகனும் நானும் ஏதோ பத்திரிகை விஷயமாகப் பேசியபடியே சற்று கண்ணயர்ந்துவிட்ட சமயம் இந்த மனிதன் வந்ததனால் நாங்கள் மருண்டு போய் யாரோ கள்ளன் என்று பிசகாக எண்ணிவிட்டோம். முதலில் உங்கள் குமாரர்தான் அடித்துவிட்டார்......ப்ரபோ! இதை எப்படியாவது மறந்துபோய் என்னை மன்னித்துக் காப்பாற்றவேண்டும்'' என்று கெஞ்சினான்.

மோஹனனையும் நோக்கி "அப்பா! ஏதோ தெரியாதத்தனமாக நடந்துவிட்டது; இதை மறந்துவிடு. நித்திரை மயக்கத்தில் மாறுடிவிட்டது. மன்னித்துவிடு.'' என்று வெகு யோக்யமாக மன்னிப்பும்

கேட்டுக்கொண்டதோடு....எஜமானரே! ப்ரூப் ரீடர் வேலையொன்று காலியாயிருக்கிறது. அதை வேண்டுமானால் இவனுக்குக் கொடுக்கலாம்.'' என்று சிபார்சும் செய்தான்.

இது எப்படி இருக்கிறதெனில், ஒரு மூட புருஷன் தன் மனைவியை ஆத்திரத்தில் நன்றாக கண்தெரியாத கோபத்துடன் அடித்து இம்சை செய்துவிட்டுப் பின்னர் அடித்த அடியினால் தழும்பு, தழும்பாக உடம்பில் வீக்கங்கொண்டு அவள் அவஸ்தைப்படுகையில் உப்புக்காப்படமும் ஒத்தடமும் தானே போட்டு சமயலையும் செய்வதுபோல இல்லையா?

தர்மலிங்கம் மோஹனனை தனியாக அழைத்துச்சென்று "எது வரையில் படித்திருக்கிறாய்? என்ன வேலை இதுவரையில் செய்தாய்'' என்று விசாரித்தார். மோஹனும் தான் படித்ததையும் வேலைசெய்யத் தெரிந்தவைகளையும் கூறினான். பிறகு ப்ரூப் ரீடர் வேலையை அவனுக்குக் கொடுத்ததாக ஆபீஸ் தோரணைப்படிக்கு அப்ளிகேஷன் பாரத்தில் கையொப்பமிட்டு வாங்கிப் பின்னர் மற்றொருவரிடம் வேலையை இரண்டு தினங்களுக்குக் கற்றுக்கொள்ளும்படியாய்க் கூறி மோஹனை இங்கு நடந்த இச்செய்தியை வெளியிட வேண்டாமென்றும் மறந்துவிடும்படியாயும் கேட்டுக்கொண்டு "நீ இந்த வேலையை கொஞ்ச நாளைக்கு 15 ரூபாய் சம்பளத்தில் செய்து வா! உன்னுடைய நிலைமையைத் தெரிந்துகொண்டு பிறகு வேறு வேலையும் சம்பள உயர்வும் கொடுக்கிறேன்'' என்று கூறினார்.

மோஹன் முதலாளியின் தர்ம குணத்தையும் பெருந்தன்மையையுங் கண்டு பரம சந்தோஷமடைந்து அப்படியே செய்வதாகக் கூறி விடை பெற்றுக் கொண்டான். தர்மலிங்கமும் வேலையைக் கொடுத்து இன்று முதலே செய்யச்சொல்லி யனுப்பினார். வேலையை யொப்புக்கொண்டு மற்றொரு ரீடரிடம் வேலை கற்றுக்கொண்டான். நான்கு தினங்களுக்குள்ளேயே தன் வேலையைத் தானே பார்க்கும் திறமை பெற்றான்.

கல்யாணியம்மாளுக்கு தன் மகன் சொக்காயும் குல்லாயுமாக 15 ரூபாய் சம்பளத்தில் வேலைக் கமர்ந்துவிட்டதானது சந்தோஷம்

சொல்லமுடியாது. 'என் மகன் ஆபீசுக்குச் சென்றிருக்கிறான்.' என்று தன் சகாக்களுடன் ஜம்பமாகக் கூறி மகிழ்வாள். அவளுடைய பலஹீனம் அதிகரித்துவிட்டதோடு இரவு சரியான தூக்கமின்றியும் வெய்யிலில் தெருத் தெருவாய் தலைமேல் சுமை நிறைந்த பளுவான கூடையைத் தூக்கிக்கொண்டு திரிந்து காய்கறி விற்றதாலும் அவளுடைய தலையின் நரம்புகளே பலங்குறைந்து கழுத்து பின்புறத்திலிருந்து தலை நரம்புகள் இழுக்கவாரம்பித்து அதனால் அடிக்கடி வலி கண்டு பாதைப்பட்டு வந்தாள். நாளடைவில் அது கண்ணிலும் தாக்கி கண்ணுக்கும் பலமாக நோய் கண்டு கை வைத்தியத்தினால் சற்று குணப்படுவதும் திரும்பவும் அதிகப்படுவதுமாக சில காலமாக உபத்திரவித்துக்கொண்டே இருப்பதால் காய்கறி வ்யாபாரத்தைச் செய்யமாட்டாது விட்டு விடும்படியாகிவிட்டது.

மோஹன் கொண்டு வரும் 15 ரூபாய் சம்பளத்தில் வெகு சிக்கனமாக குடும்பம் நடத்திவந்தாள். மோஹனும் தன் தாயிடம் 15 ரூபாயையும் அப்படியே கொடுத்து தன் கைச் செலவுக்குக் காலணா முதல் அவளிடமிருந்தே வாங்கிக்கொண்டு வெகு சந்தோஷமாகத் தன் வேலையைச் செய்துவந்தான்.

தன் வேலையில் கண்ணுங் கருத்துமாய் வெகு ஜாக்ரதையுடன் அக்கரையாய் மோஹன் வேலை செய்வதோடு சில சமயம் உதவி ஆசிரியர்கள் போட்டுள்ள தலையங்கங்களையும் வார்த்தைகளையும் மோஹன் மாற்றியமைத்துத் திருத்தி ப்ரூப் பார்த்து வரும் ரகஸியத்தை உதவியாசிரியர்களும் தர்மலிங்கமும் கவனித்து விட்டார்கள்.

தர்மலிங்கத்திற்கு அவனுடைய புத்தி விசாலம் இந்த திருத்த முறையினால் நன்றாகத் தெரிந்ததால் தமக்குள் சந்தோஷப்பட்டு ஒரு வருடத்திற்குள்ளேயே இவனையும் உதவி ஆசிரியர் ஸ்தானத்திற்கு மாற்றி 25 ரூபாய் சம்பளங் கொடுத்தார். இந்த சந்தோஷச் செய்கையால் கல்யாணியம்மாள் முன்னிலும் பன் மடங்கு அதிகம் பூரித்தாள்.

ராஜலக்ஷ்மி என்றும் போலவே தன் வேலையைக் கவனிப்பதும் மற்ற வேலைக்காரர்களின் வேலைகளை கவனித்துக் கொள்வதுமாக ஒரு விதமான வித்யாசமுமின்றி நடந்துவருகிருள். தந்தி விஷயங்களைக் கவனிக்கச் சிலர். தபால் விஷயங்களை கவனிக்கச் சிலர். வெளியூர் வர்த்தமானங்களை கவனிக்கச் சிலர். இப்படியாக வேலைக்குத் தக்க படி ஆள்கள் நியமிக்கப் பட்டிருக்கிறது. வெளியூர் வர்த்தமானங் களையும், வெளியூர் நிருபர்கள் அனுப்புவதையும் கோர்வையாக வரை வதே மோஹனனுக்கு வேலையாகக் கொடுக்கப் பட்டிருந்தது.

வெளியூர் விஷயங்களை நிருபர்கள் அனுப்புவதில் எவை எவை நீக்கப்பட வேண்டியவை. என்ற விஷயங்களை மோஹன் தர்ம லிங்கத்தினிடமும், அவரில்லாத நேரத்திலும், அவர் அதிக வேலை யாக விருக்கும் சமயத்திலும் ராஜத்தினிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளுவான். அதனுல் அடிக்கடி இவ்விருவரையும் சந்திக்கும் சந் தர்ப்பங்கள் கிடைத்துக் கொண்டே இருந்தன.

வெகு மரியாதையாயும் பெருந்தன்மையாயும் நடந்து கொள் வானே யன்றி அனுவசியமாக ஏதுமே பேசமாட்டான். அன்று தன்னை அனியாயமாக அடித்ததிலிருந்து நாகலிங்கத்தினிடம் பேசு வதும் கிடையாது. அவனுக ஏதாவது கேட்டால் மட்டும் அதிகம் பிடிப்பு கொடுக்காமல் பதில் கூறுவான். அவனை வெறுப்பாகவே நினைத்து நடந்து வந்தான். நாகலிங்கத்தின் மனத்தில் மோஹன் தன்னிடம் நடந்து கொள்ளும் மாதிரி தெரியாமலில்லை. அவன் ஓர் ப்ரூப் ரீடராக வந்து உதவியாசிரியராகவும் வந்துவிட்டான். இவன் எழுதுவது பொதுமக்களுக்குப் பிடித்தமாயுமிருப்பதால் தர்மலிங்கம் இவனுக்கு அதிக மதிப்பு கொடுத்து விடுகிருர் என்ற விஷயங்களெல்லாம் நாகலிங்கத்தின் மனத்தில் புகைந்துகொண்டே இருந்தன. ஆனுல் பகிரங்கமாக ஏதும் சொல்லவோ, செய்யவோ முடியாது உள்ளுக்குள்ளேயே வெடித்துக் கொண்டிருந்தான்.

ராஜம் மாதா மாதம் சம்பளம் கொடுக்கும் 5ம் தேதியன்று எல்லா வேலைக்காரர்களுக்கும் வெகு சந்தோஷமாயும் சிரித்த முகத் துடனும் தானே தன் கையினுல் சம்பளத்தைக் கொடுத்துவிட்டு

"இதைக்கொண்டு உத்தமமான முறையில் குடும்பத்திற்குச் செட்டாக செலவிட்டுப் பிழையுங்கள். அனுவசியமான செலவு செய்து கடனுக்கிவிடாதீர்கள். ஆடம்பர வாழ்க்கை வேண்டாம். எளிய வாழ்க்கையிலிருக்கும் இன்பம் ஆடம்பரத்திலில்லை.

குடிக்கும், பீடி சிகரெட்டுக்கும், சினிமா, ட்ராமா முதலியவைகளுக்கும் நீங்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தை வ்ரயமாக்கி வ்யாதியைத் தேடிக்கொண்டு நோயாளியாகிக் கவலைப்படாதீர்கள். காந்தியடிகளின் எளிய வாழ்க்கையை உத்தம தத்துவத்தைக் கடைப்பிடியுங்கள். அப்போது சுகப்படுவீர்கள்." என்று உபதேசம் செய்து அனுப்புவாள். இந்த புத்திமதிகள் வேலைக்காரர்களின் உள்ளத்தில் பதிந்து சந்தோஷப் படுவார்கள்; அவர்களில் நமது மோஹனனும் ஒருவன் என்று கூறவேண்டுமா!

மோகன் ஓர் அவசியமும் அவசரமுமான விஷயத்தைப் பற்றிக் கேட்பதற்குத் தர்மலிங்கத்திடம் சென்றான். அவர் இல்லாமையினால் ராஜலக்ஷ்மியின் அறைக்குச் சென்றான். ராஜலக்ஷ்மி ஏதோ ஒரு கட்டுரை வெகு ஸ்வாரஸ்யமாயும் வேகமாயும் எழுதிக் கொண்டிருந்தாள்; ஆதலால் அதைத் தடை செய்ய இஷ்டமில்லாது அங்கேயே சற்று தியங்கி நின்றிருந்தான். நேரமோ அதிகமாகிவிட்டது. ஆகையினால் மெல்லிய குரலால் "அம்மணீ" என்று கூப்பிட்டான்.

அக்குரல் கேட்டு ராஜம் திரும்பிப் பார்த்தாள். மோஹன் நிற்பதைக் கண்டு "ஓ! என்ன சமாச்சாரம். நீங்கள் வெகுநேரமாய் நிற்கிறீர்களோ! ஏன் என்னை அப்போதே கூப்பிடலாகாது?" என்றாள்.

மோஹன் :—ஏதோ முக்கியமான வேலையிலிருக்கையில் எவ்விதம் தடை செய்வது என்றுதான் பேசாதிருந்தேன். பரவாயில்லை. இதோ இவ்விஷயங்களில் எதை வைத்துக்கொள்வது. எதை விளக்குவது என்றதைக் கேட்கவே வந்தேன்.

ராஜம் :—என்ன முக்கியம் ப்ரமாதம் ஒன்றுமில்லை. நேற்று ஒரு டாக்கியைப் பார்த்தேன். அது பத்திரிகாசிரியர்களுக்காகக் காட்

டியதாகும். அதைக் குறித்துத்தான் எழுதிக்கொண்டிருக்கிறேன். வர வர சினிமாவைப் பார்க்கவும் அதைக் குறிக்கவும் அடியோடு பிடிக்கவே இல்லை. என்ன அனியாயப் படங்கள் தினம் ஒன்று குப்பை குப்பையாகத் தோன்றி படக்கலையின் வளர்ச்சியையே கொலை செய்கின்றன.

ஆபாச மென்றால் அப்படத்தை விட ஆபாசமும், வெறுக்கத் தக்க படமும் வேறு இல்லை என்றே நான் கண்டித்து எழுதிவிட்டேன். கதையின் ஆபாசத்தைப் பாருங்கள். முன் பின்னறியாத ஓர் உயர் குல வனிதை திடீரென்று காணும் ஒரு புருஷனின் தோளைப் பிடித்து ஆட்டியும், தட்டியும் தன் காதல் வார்த்தைகளை உடனே சற்றும் தியங்காமல் ஒப்புவித்து விடுகிறாளாம். கதாநாயகிக்கு வயது ஏறக்குறைய 30 மதிக்கக்கூடியவளாக படத்தில் காணப்படுகிறது. கதாநாயகனுக்கு 20 வயது கூட நிரம்பியதாகத் தெரியவில்லை. மீசை ஒட்டவைத்திருக்கும் கோரமோ கண்டு சகிக்க முடியவில்லை.

கதாநாயகன் பொம்மை என்றால் சற்றும் மிகையாகாது. இத்தகைய தம்பதி ஜோடிகள் உண்மை வாழ்க்கையில்தான் தெய்வ சங்கல்பம் என்று கூறலாம். கதை ஜோடிப்பில்—அதிலும் சினிமாவில் இத்தகைய வித்யாசமான ஜோடி அம்மா குதிர் போலவும், ஐயா கதிர் போலவும் என்ற ஹாஸ்ய பழமொழிப்படிக்குப் பாட வேண்டுமா! இது மிகவும் வெறுக்கத்தக்கதல்லவா!

அதோடு இன்னொரு முக்கிய விஷயத்தை யாரும் கவனிப்பதே இல்லை. அதாவது ஒரு கதையில் இன்னொரு சம்பவம் நிகழ்கின்றது; அடுத்த காட்சியில் ஒரு வாரம் கழித்து மற்றொரு சம்பவம் நடக்கிறது. அந்த காட்சிகளை மிகவும் இயற்கையாகக் காட்ட வேண்டுவது கடமை. அதாவது ஒரு வாரத்திற்கு முன்பு அணிந்த ஆடையும் அலங்காரமும் அப்படியே ஒரு வாரமோ மாதமோ கழிந்ததாகக் கதையில் காட்டப்படும்போதும் அதே நிலைமையிலிருப்பது அவசியம் கவனிக்கத் தக்க விஷயமாகவும்.

நேரில் நடக்கும் நாடகமாயின் இம்மாதிரி செய்வது சாத்யமில்லை; ஒப்புக்கொள்ள முடியும். ஒவ்வொரு நாளைய மாறுதலையும் சினிமாக் கலையில் வெகு சிறப்பாகக் காட்ட அவகாசம் உண்டு. காட்

டினால் அவை இன்னும் பரிமளித்துப் படத்திற்கு பெரிய அழகை யும் மதிப்பையுங் கொடுக்கும். இந்த மிகவும் அல்பமான சின்ன விஷயத்தை அடியோடு மறந்து விடுகிறார்கள். இதைத் தான் இந்த கட்டுரையில் முக்யமாகக் குறித்து எழுதி இருக்கிறேன்...அடாடா! என்ன அசட்டுத்தனம். நேரமோ ஆய்விட்டது. நீங்கள் நின்று கொண்டே இருக்கிறீர்கள். ஏதோ வார்த்தை வந்தது; வீணாக நேரம் போய்விட்டது. இதோ இதையும் அச்சு கோர்க்கக் கொடுங்கள்." என்று கூறி, மோஹன் கொண்டுவந்த விஷயங்களைப் பார்த்துக் கொடுத்தாள்.

மோஹனும் அவைகளைப் பெற்றுக்கொண்டு "அம்மணீ! படக் கலை விஷயமாகப் பேசுவது என்றால் இன்னும் எத்தனையோ இருக் கிறது. அவைகளைப்பற்றி நானும் சிறு சிறு கட்டுரைகள் எழுத உத்தேசித்திருக்கிறேன். தாங்கள் இப்போது சொன்ன குறிப்புகள் மிகவும் முக்யமானவையாகும். நான் சமீபத்தில் பார்த்த ஓர் அருமையான ஹிந்தி படத்தில் இதைவிட விசித்திரமான சம்பவத் தைக் கண்டேன்.

அதாவது ஒரே பெண்மணி ஒரே சமயத்தில் ஒரு தூதனால் அழைக்கப்பட்டு ஒரு இடத்திற்கு வருகிறாள். அவளை எஜமானன் கண்டு அக்ரமத்திற்கு வற்புறுத்துகிறான். அச்சம்பவத்தில் அப் பெண்மணியின் உடை எஜமானன் அறைக்கு வரும்போது இருந் தது எஜமானனறையில் இருக்கும்போதே மாறிவிடுகிறது. இதன் குற்றமென்னவெனில் இந்த பாகத்தை ஒரே தடவையில் எடுக்க வில்லை என்று தெரிகிறது. முதல் பாதி ஒரு சமயமும், மற்ற பாதி வேறு சமயத்திலும் எடுத்திருப்பதாகத் தெரிகிறது.

முதல் பாதி எடுக்கும்போது அணிந்த ஆடையை நினைவு மறதியாக விட்டுப்போய் வேறு ஆடையில் எடுத்திருக்கவேண்டும். மற்றொரு படத்தில் குளத்தில் சண்டை போடுவதாகக் காட்டி, அங்கிருந்து நேராக ஓடி எஜமானனிடம் விஷயத்தைச் சொல்லும் போது, கால் விரலில்கூடத் துளி ஜலம் படாமல், உயர்ந்த பட்டா டையுடன் காணப்படுவது எவ்வளவு அசம்பாவிதமாயும், அருவருக் கத்தக்கதாயும் இருக்கிறது பாருங்கள். இவை மிகவும் சிறியதும் அல்பமானதுமான குற்றங்கள்தான் எனினும் இவற்றை வெகு

நுட்பமாகக் கவனித்தால் எத்தனை பெரிய குற்றமாகின்றன பாருங்கள். இச் சிறு விஷயங்களில்தான் ஏமாந்துவிடுகிறார்கள். இதுபோன்ற நுட்ப விஷயங்களைத்தான் பொதுமக்கள் கவனித்துப் படக்காரர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். ஆகா! நேரமாகி விட்டது." என்று கூறிக்கொண்டே திரும்புகையில். இவனுக்குப் பக்கத்துச் சுவரிலிருக்கும் பெரியதான நிலைக் கண்ணாடியை அகஸ்மாத்தாகப் பார்க்க நேர்ந்தது.

அவ்வாறு அதைப் பார்த்ததும் திடுக்கிட்டான். ஏனெனில் நிலைக்கண்ணாடியின் எதிர்ப்புறமுள்ள ஜன்னலருகில் நாகலிங்கமும் சந்தானக்ருஷ்ணனும் இந்தப்பக்கம் இவர்களை ஒருவிதமாக விரைக்கப் பார்த்தபடி பல்லையும் உதட்டையும் கடித்து முகத்தைச் சுளித்துக் கொண்டு நிற்பதைக் கண்டு உண்மையில் மோஹன் திடுக்கிட்டு நடுங்கினான். வெளியே போக யத்தனித்தவன் அசைவற்று நின்று விட்டான்.

7.வது அதிகாரம்.

காருண்யப் பதுமை—ஆரண்ய இதயம்

உலகத்தில் தாம் தாம் செய்யும் கருத்தின் வேகச் சாயல் அவரவர்களின் முகத்திலேயே "அடுத்தது காட்டும் பளிங்குபோல் கடுத்தது காட்டும் முகம்" என்ற முதுரைப்படிக்கு நன்கு விளங்குவது இயல்பல்லவா! நாகலிங்கமும் சந்தானக்ருஷ்ணனும் ஜன்னலால் க்ரூர மனத்துடன் பார்த்த பார்வையின் கொடிய கருத்து அவ்விருவர்களுடைய முகத்திலும் ஜொலிக்கின்றது

தாங்கள் பார்த்துக்கொண்டிருப்பதை இதுபரியந்தம் கவனிக்காதிருந்த மோஹன் இப்போது பார்த்துவிட்டதை யறிந்ததும் அவர்களின் முகக் களையும் மாறுபட்டது. தைரியமாக எதிரே வருவதற்கும் முடியவில்லை. மோஹனனை ஒரு முடுக்கு பார்வை பார்த்து உதட்டைக் கடித்துக்கொண்டார்கள்.

இத் துட்டர்களின் பார்வையைக் கண்டு மோஹன் சற்று கலக்கமுற்று நின்றதன் உண்மையறியாது ராஜம் ஏன் இப்படி ஒரு வாறு நிற்கிறார் என்று இமைகொட்டும் நேரத்தில் பலவிதமான குழப்பத்துடன் நோக்கினாள். உடனே "மிஸ்டர் மோஹன்! ஏன் ஏதோ ஒருவாறாக நிற்கிறீர்கள்? என்ன விசேஷம்?" என்று பதறியவாறு கேட்டாள். மோஹன் பதில் கூறமாட்டாது தியங்கிய படியே ராஜத்தின் முகத்தையே உற்று கவனித்து பரிதாபகரமாக நோக்கினான்.

மகா புத்திசாலியாகிய ராஜம் எழுந்து மோஹனனின் அருகில் வந்தாள். அவளும் அகஸ்மாத்தாக கண்ணாடியைக் கவனித்தாள். அந்த இரு உருவங்களையும் அவளே நேரில் கண்டாள். அக் கண்ணா டியின் மூலமே அவர்களை ஒரு மாதிரி அலக்ஷ்யமாகப் பார்த்து உடனே தடதடவென்று சென்று தன்னாசனத்தில் அமர்ந்தாள்.

ராஜமும் இவர்களைப் பார்த்து விட்டாள் என்பதை மோஹன் நன்கறிந்து கொண்டான். அம் மங்கை மடவன்னம் அலக்ஷ்யமாக ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சென்றதானது மோஹனை வியப்புக் கடலிலாழ்த்தியது. அவளுடைய தைரியத்தையும், பெருந் தன்மையையுங் கண்டு தனக்குள் மிக்க ஆச்சரியமடைந்தான். அதே சமயம் ராஜம் "மிஸ்டர் மோஹன்! காட்டில் சென்றால் கணக்கற்ற துஷ்ட மிருகங்களிருப்பது சகஜமல்லவா! துஷ்ட மிருகங்களுக்கிடையே தான் வேட்டைக்காரர்களும் வசித்து வேட்டையாட வேண்டி இருக்கிறது. இது வியப்பல்லவே...... நேரமாகியது......சீக்கிரம் அச்சுக்குக் கொண்டு கொடுங்கள்." என்று வெங்கலமணி யடிப்பதுபோலக் கூறினாள்.

விடுகதை போன்று இவ்வார்த்தையைக் கேட்ட மோஹன் முன்னிலும் அபாரமான ஆச்சரியமும் சந்தோஷமும் தனக்குள் அடைந்து விடை பெற்றுகொண்டு போய்விட்டான். ராஜமும் தன் வேலையைக் கவனிக்கத் தொடங்கினாள். அந்த ஜன்னலருகில் நின்ற படியே இச்செய்கைகளையும் கவனித்திருந்த அவ்விருவரும் ஏதோ

ஒரு விதமாகப் பேசிக்கொண்டே ஒருவரையொருவர் பார்த்தார்கள்.

நாகலிங் :—என்ன சந்தானம்! ஆசாமியின் துணிச்சலைப் பார்த்தாயா! நான் இத்தனை வருட காலமாகப் பழகியும் உன் சகோதரியின் எதிரில் நின்று தாராளமாகத் தனித்துப் பேசியதில்லை. இந்த மனிதனின் தைரியத்தை நினைத்தால் மிக்க வியப்பாக விருக்கிறதே!

கிருஷ் :—வியப்பு! வியப்பைப் பாரு; தைரியத்தை நசுக்க வேண்டாமா! ஓர் பெண்பிள்ளை தனித்திருக்கையில் அவளிடம் அவனுக்கென்ன பேச்சு? சோதாப்பயல். இருக்கட்டும்......உன்னையும் அவனையும் ஒத்திட்டுக் கூறுகிறாயே! நீ என் சகோதரியுடன் பேசினாலும் ஒருவாறு குற்றமில்லை; ஏனெனில் நீயே அவளுடைய துணைவனாகப் போகிறவன் அல்லவா?—என்று கூறி நாகலிங்கத்தைப் பார்த்து ஒருவிதமாக நகைத்தான்.

நாகலிங்கமும் அபாரமான சந்தோஷமும் புன்னகையும் கொண்டு "என்ன கிருஷ்ணா! தினம் என்னை இவ்வாறு பரிகஸித்துக் கொண்டே வருகிறாய்! இது நடக்கும் காரியமா!" என்று க்ருஷ்ணனைத் தட்டிக் கொடுத்தவாறு கேட்டான். இதற்குள் நாகலிங்கத்தை யாரோ அழைத்ததால் அவன் போய்விட்டான். க்ருஷ்ணன் ராஜத்தின் அறைக்கு வந்து நின்றான்.

திடீரென்று தன் அண்ணன் தன்னறைக்குள் வந்து நிற்பதைக் கண்டு ராஜம் வியப்புறவில்லை. ஏனெனில் கண்ணாடி பிம்பத்தில் ஏற்கெனவே அவனைப் பார்த்து விட்டதால் இப்போது புதிதாக ஒருவிதமான உணர்ச்சியும் உண்டாகவில்லை. அவனை வழக்கம் போல "என்ன க்ருஷ்ணா! உட்காரு. ஏது இத்தனை அவகாசமாக வந்துவிட்டாய்?" என்றாள்.

க்ருஷ்ணன் :—என்னை விசாரித்து உபசரிக்க வேண்டாம். உன்னுடைய விஷயத்தை ஒழுங்காக கவனித்துக் கொண்டால் போதும். அந்த ப்ரூப் ரீடரிடம் உனக்கென்ன வேலை? அந்தப்

பயல் தைரியமாக இங்கு எதற்கு வருகிறான்? மணிக்கணக்கில் உன்னிடம் நிர்ப்பயமாகப் பேசுகிறான். இதென்ன செய்கை. இதென்ன பயங்கெட்டத்தனம்?

ராஜம் :—ஓகோ! என்னைக் கண்டித்துப் புத்தி கூற வந்தது பற்றி மிக்க சந்தோஷம். உன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளு. பிறகு உனக்கு நியாய அனியாயத்தின் வேறுபாடுகள் தெரியும். அந்த விவரம் புரியாமலேயே நீ என்னைக் கண்டிக்க வராதே! உனக்கு மேல் பெரியவரும் நம்மிருவருடைய நன்மையைக் கோருகிறவருமான நம் பிதாவும் மாதாவும் இருக்கிறார்கள். உனக்கு அந்த கவலை வேண்டாம்!'' என்று சற்று அழுத்தந் திருத்தமாகவே கூறினாள்.

க்ருஷ்ணனுக்கு இதைக்கேட்டதும் அடங்காத கோபம் வந்து விட்டது. "ஆகா! அப்படியா சொல்லுகிறாய்! இருக்கட்டும் நடக்கும் வழியில் நடக்கட்டும்'' என்று முறைப்பாகக் கூறிவிட்டுப் போய்விட்டான்.

தன் வேலைக்குச் சென்ற மோஹனனுக்கு மட்டும் இவர்கள் பார்த்த பார்வையினால் என்ன விளையுமோ வென்ற பயமும் ஒரு வகையான கலக்கமும் மனத்தில் புகுந்து கொண்டன. இந்த நிலைமையோடு தன் வேலையை ஒழுங்காகச் செய்து முடித்தான்.

மறுதினம் எல்லோருக்கும் சம்பளம் கொடுக்கும் தினமாகையினால் வழக்கம் போல ராஜம் சம்பளத்துடன் தொழிலாளர்களின் முன்பு ப்ரஸன்னமானாள். எல்லா தொழிலாளர்களும் சம்பளத்திற்காக காத்திருந்தார்கள். ஆனால் மோஹனன் மட்டும் அங்கு கூட்டத்தில் இல்லை. ராஜம் ஒவ்வொருவருக்கும் சம்பளத்தைக் கொடுத்து வழக்கப்படி கைபெழுத்து வாங்கிக் கொண்டாள். அன்று 5 பேர்களுக்கு சம்பளம் அதிகப்படுத்தி இருந்தது. அந்த 5 பேர்களும் தங்களுக்கு 5 ரூபாய் அதிகமாக்கியதற்காக மிக்க சந்தோஷப்பட்டுத் தமது நன்றியறிதலைத் தெரிவித்தார்கள்.

புன்னகை பூத்த வதனத்துடன் ராஜம் மற்றவர்களை நோக்கி "அன்பர்களே! உங்களுக்கும் இவ்வாறு சம்பளம் உயரும் நாளைக் கடவுள் காட்டுவார். ஆனால் அதற்கு உங்களுடைய முயற்சியும், ஒத்துழைப்பும் தொழிலில் ஊக்கமும்தான் ப்ரதானம். உங்களுடைய அருமையான உழைப்பினால் இப்பத்திரிகாலயம் ப்ரகாசிக்கின்றதே யன்றி சிலர் எழுத்தாளர்களாக எழுதிவிடுவதால் மட்டுமல்ல என்பதை நீங்கள் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். வெகு விரைவிலேயே நீங்களும் அம்மாதிரி உயர்ந்த சம்பளம் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள்.. ...

இதோ பாருங்கள். புதிதாக வந்துள்ள மோஹனன் தன் சம்பளத்தைத் தவிர தன் புத்திக் கூர்மையினாலும், அனுபவ ஞானத்தினாலும் தனிமையில் கட்டுரைகளும் எழுதிப் பணம் சம்பாதிக்கப் பழகுகிறார். அம்மாதிரி நீங்கள் செய்தால் இப்பத்திரிகையே யல்ல; எப்பத்திரிகையிலாவது நீங்கள் எழுதி ஊதியம் பெறலாம். பிழைக்கும் வழிகள் உலகத்தில் பற்பல உள்ளன. அவற்றில் இதுவும் ஒன்று............என் மோஹன் சம்பளத்திற்கு வரவில்லை? வீட்டிற்குப் போய்விட்டாரா! இன்று சம்பளத்தேதி நினைவில்லையா?" என்று அப்போதே கூட்டத்தில் அவனில்லாததை யறிந்து கேட்டாள்.

அதற்கொருவன் வெகு வணக்கத்துடன் பேசத்தொடங்கி "அம்மணீ! அவருக்கு நேற்று முதல் உடம்பு சரி இல்லை. காய்ச்சலாகவிருக்கிறது. லீவு கேட்டால் மானேஜர் ஐயா கொடுக்க முடியாதென்று மறுத்துவிட்டார். அவர் ஜுரத்துடன் வந்து நேற்றும் இன்றும் வேலை செய்தார். அதிகமான ஜுரம் அடிப்பதால் அவரால் தாங்கவே முடியவில்லை. வேலை முடிந்ததும் வீட்டிற்குப் போய்விட்டார். அவரால் நடக்கவும் முடியாது தவித்தவாறு சென்றார். சம்பளத்தை என்னிடம் கொடுத்தால் நான் அவரிடம் கொண்டு கொடுக்கிறேன்" என்றான்.

இதைக் கேட்ட ராஜத்திற்கு விஷயம் ஒருவாறு விளங்கிவிட்டது. அன்று தன் அண்ணனும் நாகலிங்கமும் பார்த்த பார்வையும்

எண்ணிய எண்ணமும்தான் உடல் நலம் சரி இல்லை என்றபோதும் லீவு கொடுக்க மறுக்கச் செய்தனபோலும்; இருக்கட்டும் என்று தனக்குள் எண்ணினுள். மோஹனனுக்குக் கொடுக்கும் சம்பளத்தை அந்த மனிதனிடங் கொடுத்து "ஐயா! இதையவரிடம் கொடுத்து வழக்கப்படி ரசீது வாங்கிக்கொள்ளும். உடம்பு சற்று குணமான பிறகு வேலைக்கு வரச்சொல்லும். பயப்படவேண்டாம். எஜமானருக்கு அம்மா சொல்கிறுர்களாம் என்று சொல்லும்." என்று தைரியமாகக் கூறி பணத்தையுங் கொடுத்து அனுப்பிவிட்டாள்.

ஒரு பெரிய எஜமானனின் மகள் என்றும், பணக்காரி என்றும் சற்றும் கர்வமில்லாது ஏழைத் தொழிலாளர்களிடத்தில் வெகு சமத்துவமாயும் அன்பாயும் நடந்துகொள்ளும் அருமையான குணத்தைக் கண்டு எல்லோரும் மெச்சி மகிழ்ந்தார்கள். பணத்தைப் பெற்றுக்கொண்டவன் நேரே மோஹனன் வீட்டிற்குச் சென்று மோஹனிடம் பணத்தைக் கொடுத்து, "ஐயா! உங்களுடைய உடம்பை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொண்டு குணமாகியதும் வேலைக்கு வரும்படி எஜமானியம்மாள் தெரிவித்தார்கள். எஜமானருக்கு அம்மா சொல்லுகிறுர்களாம். நான் சென்றுவருகிறேன்." என்றுன்.

104 டிகிரி ஜுரமடிக்கும் நிலைமையிலும் மோஹனனுக்கு இவ் வார்த்தைகள் தன்னையறியாத அபரிமிதமான சந்தோஷத்தையும் தன்னம்பிக்கையையுங் கொடுத்தன. இறந்து தெய்வமாகவிருக்கும் தன் தாயின் அனுக்ரகத்தினுல்தான் அந்தம்மாளின் மனத்தில் இத்தகைய கருணை எண்ணம் உண்டாகியது என்று மனமார எண்ணினுன்.

பணத்தைக் கல்யாணியம்மாளிடம் கொடுத்தான். மறுதினமும் உடம்பு குணப்படவில்லையாதலால் அவன் ஆபீஸின் ரூல்படிக்கு ஒரு கடிதமெழுதி அதைத் தன் தாயிடம் கொடுத்து ஆபீஸுக்குச் செல்லும் மற்றொரு ஆளின்மூலமாக அதை ஆபீஸில் சேர்க்கும் படிக்குத் தெரிவித்தான். கல்யாணியம்மாளும் அப்படியே செய்தாள்.

நாகலிங்கம் அக் கடிதத்தைப் பார்த்ததும் சீறி விழுந்து கிர்த்தனம் செய்தான். இந்த பயலுக்கு லீவு வேறு, இந்த நாலு

நாளைக்கும் சம்பளம் பிடிக்கப்படும், அதற்குமேலும் வராவிட்டால் வேலையிலிருந்து நீக்கப்படும் என்று சொல்லு!'' என்று ஒரு ஆளை ப்ரத்யேகமாக அனுப்பித் தெரிவிக்கச்செய்தான்.

பெரிய பெரிய படிப்புகளெல்லாம் படித்த கூட்டமே 10 ரூபாய் வேலைக்கு குட்டிக்கரணம் போடும் இக் காலத்தில் சாதாரண படிப்பாளி, பரம ஏழை, தன்னுயிரைப்போல எண்ணித் தன்னை வளர்த்த அன்னையின் தள்ளாத வயதில் அவளைக் காக்கும் பாரம் தலைமேல் விழுந்துள்ள சிறுவன் என்ன செய்வான்! இந்த வார்த்தையினால் வெதும்பினன். உடம்பு சீக்கிரம் குணமாகவேண்டி கடவுளை வேண்டினன்.

நான்கு நாட்களும் ஓடி மறைந்துவிட்டன. மோஹனனின் உடம்பு குணப்படவில்லை. அப்போதும் ஜுரம் காய்கிறது. "இனிமேல் ஆபீஸுக்குப் போகாவிட்டால் வேலை போய்விடுமே! என்ன செய்வது?'' என்று விசனித்தபடியே ஆபீஸுக்கு ஒரு வண்டி வைத்துக்கொண்டு புறப்பட்டான். கல்யாணியம்மாளுக்குக் கவலையும் திகிலும் அதிகரித்தன. உடம்பு சீக்கிரம் குணமாகவில்லையே! என்ன செய்வேன்? '' என்று தத்தளிக்கின்றாள்.

மோஹனன் வெகு பலஹீனமான நிலைமையில் தள்ளாடியவாறு ஆபீஸுக்கு வந்தான். ஆபீஸிலுள்ள மற்ற தொழிலாளர்கள் எல்லாம் இவனது நிலைமையைக் கண்டு பரிதாபப்பட்டார்கள். கஞ்சி கூடப் பிடிக்கவில்லை. வெகு பலஹீனப்பட்டுவிட்டான். நாகலிங்கத்தினிடம் நேரில் போய் கேட்கவோ பேசவோ என்றும் மோஹன் சம்மதிக்கவில்லை. ஆதலால் தன்னுடன் வேலை செய்யும் மற்றொருவரை வேண்டிக்கொண்டு தனக்கு ஒத்தாசை செய்யும்படிக் கேட்டான். அவனுடைய ஒத்தாசையினால் வேலை நடந்தாலும் உட்கார்ந்திருக்க முடியாமல் தத்தளிக்கின்றான். கண்கள் சிவந்து நீரைச் சொறிகின்றன. பார்க்க மிகவும் பரிதாபகரமாகவிருக்கிறான்.

எஜமானர் ஊரிலில்லை என்கிற பெருத்த திமிர்கொண்ட தைரியத்தினால் நாகலிங்கம் மோஹனுக்கு ஐயோ பாவம் என்றுகூடச் சொல்லாமலும், இவ்விடம் வந்து பார்க்காமலும் இருந்துவிட்டான்.

அன்று செல்ல மறு தினமும் மோஹனன் தள்ளாடி விழுந்த வாறு வண்டியிலிருந்து இறங்கினான். காரியாலயத்தின் மெத்தை மீதிருந்து இக் காட்சியை ராஜலக்ஷ்மி பார்த்துவிட்டாள். மிகவும் இளகிய மனத்தையுடைய அம் மின்னாளின் இதயம் தவித்தது. "ஐயோ பாவம்! இத்தகைய தேக நிலைமையிலும் இப் பாழும் வயிற்றுப் பிழைப்புக்காகவன்றோ வருகிறார். சேச்சே! என்ன அக்ரமம்!" என்று தனக்குள் எண்ணினாள். சற்று நேரத்திற்கெல்லாம் சமாச்சார தந்திகளைப் பார்வையிட வந்தாள். வழியில் ஒரு தொழி லாளன் வாந்தி எடுத்துக்கொண்டு தவிப்பதைக் கண்ட ராஜம் தான் ஓர் முதலாளியின் மகள் என்பதையே மறந்து அந்த தொழிலாளிக்கு தலையைப் பிடித்து, முதுகில் தடவித் தானே ஜலங் கொண்டுவந்து கொடுத்து உபசரித்தாள்.



உடம்பு என்னவென்று கேட்டதற்கு அந்த மனிதன் ஆயாசத்துடன் கண்ணீர் விட்டுக்கொண்டே "அம்மணீ! தாயே! ஏழைக் கூலிக்கு இத்தனை உபசாரம் செய்யும் புண்ணியவதிகள் இருப்பதனுல்தான் உலகத்தில் கொஞ்சம் மழை யாவது பெய்கிறது. எனக்கு ஒரு வாரமாக உடம்பு சரியில்லை. வாந்தியும், வயிற்று வலியும், தலைசுற்றலும் வதைக்கின்றன. மகா புண்ணியவான், தர்மராஜா, எஜமானர் ஊரிலில்லை. இந்தப் பாவி மானேஜர் லீவு கொடுக்க முடியாதென்றும் வேலையை விட்டுப் போய்விடு என்றும் கூறிவிட்டார்.

அம்மா! நாங்கள் ஏழைகள். வயிற்றுக் கஞ்சிக்கு வீங்கி நிற்கும் பஞ்சைகள். இந்த கஞ்சியிலும் மண் விழுந்துவிட்டால் பிள்ளை குட்டிக்காரன் எப்படிப் பிழைப்பது. இந்த மனிதன் இம் மாதிரி செய்து பழைய ஆசாமிகளை வேலையிலிருந்து நீக்கிவிட்டு தனக்கு சொந்தமானவர்களையோ, தெரிந்தவர்களையோ கொண்டு வைத்துக் கொள்கிருன். இம்மாதிரி ஏழைகளின் வயிறெரியச் செய்து விட்டான். எஜமானரிடம் சொல்லவும் பயமாயிருக்கிறது. என்ன செய்வேன்? மோஹனனும் அவஸ்தைப்படுகிருன். உடல் நலம் குன்றி இருக்கிற சமயம் இப்படிச் செய்தால் ஆள் செத்துத்தான் போய்விடுவான்'' என்று கண்ணீர் வழியக் கூறினுன்.

இதைக் கேட்ட ராஜத்தின் மனம் உருகியது. ஏழைகளின் மன நிலைமையை நன்கறிந்துகொண்டாள். உடனே ஒரு ஆளைக் கூப்பிட்டு வண்டியொன்று அமர்த்தி அந்த ஏழையைத் தானே நேரில் வீட்டிற்கு அனுப்பி உடம்பு குணமாகியதும் வரும்படியாகக் கூறினுள். அந்த தொழிலாளியின் சந்தோஷத்திற்கோர் எல்லையே இல்லை. ராஜத்தை வாழ்த்திக்கொண்டே சென்றுன்.

ராஜம் நேரே காரியாலயத்திற்குள் வெகு வீர வனிதையாய் கம்பீரத்துடன் சென்றுள். வழியில் நாகலிங்கமும் சந்தானக்ருஷ்ண னும் இவளுடைய செய்கையை கவனித்தபடியே நிற்பதைத் தெரிந்து கொண்டாள். ஆனுல் அதைக் காட்டிக்கொள்ளாது சென்றுள்.

கிருஷ்ணன் இடைமறுத்து "பேஷ்! ராஜம்! உன் செய்கைகள்

வரவர மிகவும் வெட்கக்கேடாக விருக்கின்றன. ஒரு கூலிக்கார னுக்கு உபசாரம் செய்வதைப் பிறர் கண்டால் உன்னை என்ன கேவலமாக நினைப்பார்கள். உன்னுடைய அந்தஸ்து என்ன, உன்னிடம் கூலி வேலை செய்யும் அம் மனிதனின் நிலைமையென்ன? சீச்சீ! அவமானம்! அவமானம்! தலை இரக்கமாக விருக்கிறது.'' என்று கடுமையான பார்வையுடன் கூறினன்.

இதைக் கேட்ட அம் மடமயிலாள் அலக்ஷியமாயும், ஒரு வித மாக சிரித்துக்கொண்டும் "ஊம்! உயர்வு தாழ்வு என்ற வித்யாஸத் தை மனிதன் நினைப்பதேயல்லாது கடவுளுடைய ஆணையில் வேறு பாடுகள் இல்லை என்பதை மறக்காதவள் நான். நான் என்னை உயர் வாக எண்ணி இருப்பின் எனக்குத் தாழ்வுகள் தோன்றும். இதுவு மில்லை, அதுவுமில்லை. என்னைக் கண்டு பிறர் பரிகஸிக்கட்டும். அதனல் எனக்கு ஒன்றும் கவலை இல்லை. என்னைப் பார்த்து சிரிப்பவர்களைக் கடவுள் சிரித்தும் பரிகஸித்தும் பார்த்துக்கொண்டு தானிருப்பார். அம்மாதிரி இல்லாது இருப்பின் போதும். நான் ஓர் ஏழை. நானும் கடவுளால் இவ் வுலகில் இயன்றஅளவு சேவை செய்யும் பொருட்டு அனுப்பப்பட்ட தொழிலாளி. என் தொழிலை நல்ல முறையில் அக் கடவுளுககுப் போதுவாக நடத்திக்கொண்டு போவதில் எனக்கென்ன வெட்கம்? எனக்கு என்ன இழிவு? ஒன்றுமில்லை. நீ பெரிய மனிதனுயின் உன் வரையில் பார்த்துக்கொள்ளு.'' என்று துடுக்காகக் கூறினள்.

க்ருஷ்ணனுக்கு இது சுறுக்கென்று மனதில் தைத்ததால் கோபம் அதிகரித்தது. வெகு க்ரூரமாக ராஜத்தை நோக்கி, "உம்...நீ பரம வேதாந்தியாகிவிட்டாய் பாவம்! 'மலையில் விளைந் தாலும் குந்தாணியில்தான் மசியவேண்டும்,' என்ற பழமொழிப் படிக்கு நீ எததனை தத்துவமும் திமிரும் கொண்டு பேசியபோதிலும் இந்த உத்தமரிடந்தான் உன் வாழ்க்கையின் நிழலாடப்போகிறது என்பது ஞாபகமிருக்கட்டும்.'' என்று சற்று அழுத்தமான குரலில் கூறினன்.

இது கேட்ட ராஜம் "என்ன! என்ன!! என் வாழ்க்கையின் நாடக அமைப்பைப் பற்றிய கவலை இப்போது உனக்கெதற்கு?

உன் வாழ்க்கையின் புண்ணிய நாடகத்தை முதலில் சரியான முறையில் ஒத்திகை நடத்திப் பார்த்துக்கொள்ளு." என்று கூறிக் கொண்டே அவ்விடத்தில் நிற்காமல் சடக்கென்று போய்விட்டாள். நாகலிங்கத்திற்குத் தன்னைக் கொடுத்து விவாகம் செய்யும் நோக்கத் தில் இருப்பதைக் கேட்டு மனந் தவித்தாள். அந்த விஷயமே மனதில் வேலை செய்ய வாரம்பித்துவிட்டது. அதே நினைவால் தன் னறைக்கே திரும்பிப் போய்விட்டாள்.

தன்னுடன் பிறந்த மனிதனே தன் விஷயத்தில் இத்தகைய எண்ணம் கொண்டிருப்பதை எண்ணி தாங்கமாட்டாத வியப்பும் விசனமும் அடைந்து கலங்கிவிட்டாள். சிறிது நேரம் தன்போக் காக யோசித்தவாறு உட்கார்ந்திருந்தாள். அச்சமயம் அந்த தொழி லாளன் மோஹனைப் பற்றிக் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. உடனே எழுந்து தொழில் செய்யும் விடுதிக்கு வந்தாள்.

மோஹன் இந்த சில நாட்களுக்குள்ளேயே தேகம் மிகவும் மெலிந்துபோய் துரும்பெனத் தோற்றத்துடன் தத்தளித்தவாறு, கண்ணில் துக்கத்தினாலும் ஜுரத்தினாலும் நீர் பெருகியவாறு ப்ரூப் பார்த்துக் கொண்டே இருக்கிறான், நாகலிங்கம் வெகு அட்ட காஸத்துடன் ஒவ்வொரு தொழிலாளியையும் "வேலைகள் ஆயிற்று, ஆயிற்று?" என்று அதட்டியவாறு பார்த்துக்கொண்டே மோஹனை னிடம் வந்தான்.

அதிகார தோரணை தொனியில் "என்ன ஐயா! உம்முடைய வீட்டில் யார் இறந்து விட்டார்கள்? அழுது கொண்டே வேலை செய்கிறீர்கள்? இது ஓர் காரியாலயம் என்று பார்த்தீரா, அல்லது சோம்பேறி மடம் என்று நினைத்தீரா! இந்த ப்ரூப் ஷீட்டை உம் மிடம் கொடுத்து எத்தனை நேரமாயிற்று. வேலை செய்ய வந்தீரா பாசாங்கு செய்து பொழுதைப் போக்க வந்தீரா?" என்று கேட் டான்.

மோஹன் சகிக்க முடியாத அபாரமான விசனத்துடன் தலை குனிந்தபடியே, "ஐயா! இந்த இடத்தை நான் சாதாரண காரியா

லயமாக மட்டும் நினைக்கவில்லை. இதை யோர் பெரிய பவித்திர மான நிலையமென்றும் மதிக்கின்றேன். ஆனால் சோம்பேறி மடமாக ஆய்விடாமல் கடவுள் காக்கவேண்டுமே என்றும் வேண்டுகின்றேன். நானும் மனித சரீரங் கொண்டவன்தான். எனது இப்போதிய நிலைமையில் என்னால் எழுந்திருக்கக் கூட முடியவில்லை. இந்நிலை மையில் நீர் இப்படி கருணையற்றுப் பேசுவதுதான் எனக்கு மிக்க வருத்தமாக விருக்கிறது. உமக்கு ஈவிரக்கமில்லையா! மனிதனுக்கு மனிதன் கருணை காட்டாத காலமா கலிகாலம்! என்னால் கூடியவரை யில் சீக்கிரமே பார்த்து வருகிறேன்'' என்று மோஹன் இதுகாறு மில்லாத தைரியத்துடன் கூறினான்.

இந்த சம்பவங்களைப் பார்த்துக்கொண்டே வந்து விட்டாள் ராஜம். சற்று நின்று கவனித்தாள். மோஹனனுடைய தள்ளாத பரிதாபகரமான நிலைமையும், அவன் கண்ணீர் பெருகக் கூறிய வார்த்தைகளும் ராஜத்தின் மனத்தையுருக்கின. மனிதனுக்கு மனிதன் கருணை காட்டாத காலமா என்ற வார்த்தை ராஜத் தின் இதயத்தைத் தாக்கியது. சில வினாடி நேரம் ஒன்றும் தோன் றாது நின்றாள்.

உடனே ஓட்டமாக தன்னறைக்குச் சென்று ஜுரம் குறிக்கும் கருவியை (தர்மாமீட்டர்) எடுத்துக்கொண்டு அடுத்த நிமிடமே மோஹன் முன்பு ஓர் வீரகாளிபோலத் தோன்றி நாகலிங்கத்தை ஒரு விரைத்த பார்வையாய் பார்த்தபடியே மோஹனை நோக்கி “மிஸ்டர் மோஹன்! இதை வாயில் வைத்துக்கொள்ளும்'' என்று தைரியமாகக் கூறி அக்கருவியை அவன் வாயில் தானே வைத்தாள்.

இங்கு ராஜம் திடீரென்று வருவதை யறியாத நாகலிங்கம் அவள் தற்போது செய்யும் செய்கையுடன் வந்ததானது அவனை சற்று ஒரு ஆட்டு ஆட்டியது. மெல்ல திருகத் திருக விழித்த படியே நழுவவாரம்பித்தான். இது கண்ட ராஜம் “மிஸ்டர் நாக லிங்கம்! நில்லும்.'' என்று உத்திரவிடுவது போலக் கூறினாள். இது கண்டும், கேட்டும் நாகலிங்கம் தன்னையறியாமல் திடுக்கிட்டு நின்று விட்டான். முகம் விகாரப்பட்டுக் குன்றிவிட்டது.

8-வது அதிகாரம்.

உத்தம குணமே உயரிய போக்கிஷம்.

உலகத்தில் அதிகாரிகளுக்கு முன்பு தம் குற்றமோ செய்கையோ வெளியாகி விட்டால் அத் தருணம் அவர்களின் நிலைமையே மாறி தர்மசங் கடமாகிவிடுவது சகஜமல்லவா! நாகலிங்கம் எத்தனை கருணையற்ற இதயத்துடன் நடத்தியபோதிலும் தனக்கும் மேல்பட்ட எஜமானி கண்டுவிட்டதானது அவனைச் சித்திரவதை செய்துவிட்டது. எவ் வகையில் சமாளித்துப் பதில் கூறலாம் என்கிற யோசனையில் திரும்பி விட்டான். மறு நிமிடமே தர்மாமீட்டரை ராஜம் எடுத்துப் பார்த் தாள். அதில் 104-இருப்பது கண்ட இளகிய மனமுடைய ராஜத் தின் கண்ணில் ஜலம் வந்துவிட்டது. அக்கருவியை நாகலிங்கத்தின் முன்பு நீட்டி "ஐயா! இதை வாங்கிப் பாரும். நீர் மனிதப் பிற வியா! அன்றி.........என்று முடிக்காமலேயே அவனிடம் கொடுத் தாள்.

நாகலிங்கமும் தட்டமாட்டாது வாங்கிப் பார்த்தான். கடின சித்தத்தில் கருணை சுறக்குமா! எனினும் அதிக ஜுரம் என்பதை மட் டும் அப்போதே அறிபவன்போல் நடித்து "அடாடா! இத்தனை அதிக ஜுரமென்று சொல்லவில்லையே! ஏதோ சாதாரணமென்றல் லவா நினைத்தேன். வேலைகள் கெட்டு வீணுகி விடுகிறதே; மெல்ல செய்யட்டுமென்று பார்த்தேன்.'' என்று வெகு தளுக்காகக்கூறினன்.

ராஜலக்ஷ்மியின் முகத்தில் கோபஜ்வாலை தாண்டவமாடுகிறது. கண்கள் சிவந்து சுழலமிடுகின்றன. அவள் தன்னை சமாளித்துக் கொண்டு; "ஆடு நனைகிறதற்கு கோனாய் குந்தி அழவில்லையா! அப் பழமொழி மறக்காது. சகல விஷயமும் நீலகண்டன் சொல்லிவிட்

டான். தேளுக்கு இடங்கொடுத்தால் ஜாமத்திற் கொருமுறை கொட்டுவது போல் உமது தர்பார் இருக்கிறது.

எந்த மனிதனுயின் என்ன? நோய் என்பது ஒன்றல்லவா! சிச்சி! இத்தகைய கடின இதயத்தை நான் பார்த்ததுமில்லை, கதையில் படித்ததுமில்லை. மிஸ்டர் மோஹன்! ப்ளூப் ஷீட்டை கீழேவைத்துவிட்டு எழுந்திருங்கள். யாரிடம் மருந்து சாப்பிடுகிறீர்கள்?'' என்று மிக்க அன்புடனும் ஜீவகாருண்யத்துடனும் கேட்டாள்.

மோஹ.—(கண்ணீர் பெருக) அம்மணீ! யாரோ ஒரு நாட்டு வைத்தியரிடம் மருந்து வாங்கிக் கொண்டேன். அதில் குணமே இல்லை. ஏழை என் செய்வேன்? பெரிய மருத்துவரிடம் செல்ல கையில் பொருள் இல்லை. பலஹீனமோ அதிகரித்துக்கொண்டே வருகிறது.

ராஜம்:—ஐயா! கவலைப்படாதேயும். கடவுள் கிருபையால் சொஸ்தமாகிவிடும். நீர் இந்த சீட்டைக் கொண்டுபோய் ஜெயபுரம் ஆஸ்பத்திரியில் கொடுத்துவிடும். அங்கேயே உம்மை வைத்துக் கொண்டு கவனிப்பார்கள். அது தர்ம வைத்தியசாலை. உம்மைப் பணம் கேட்கமாட்டார்கள். உடம்பு குணமாகியதும் வாரும். 15 தினங்கள் லீவு எடுத்துக்கொள்ளுங்கள். கவலையும் அதைரியமும் கொள்ளாது சென்று வாரும். கடவுள் இருக்கிறுர்.'' என்று கூறி சீட்டையுங் கொடுத்து தன்னுடைய மோட்டார்காரிலேயே அவனை ஏற்றி அனுப்பினுள்.

மோஹனுக்கு அவ்வளவு ஜுரத்திலும் ராஜத்தின் உதார குணத்தின் செய்கை அவனைப் பரவசமுறச் செய்தது. இத்தகைய உத்தம குணத்திற்காகத்தான் உலகத்தில் மழை பெய்கிறது என்று எண்ணி மகிழ்ந்து ராஜத்தினிடம் சொல்லிக்கொண்டு தள்ளாடித் தத்தளித்தவாறு நடந்து வந்து வண்டியில் ஏறிக்கொண்டான்.

நாகலிங்கத்திற்கோ இச்செய்கை வெகு அசூயையையும் வயிற்றெரிச்சலையும் கிளப்பியது. ஆனுல் என்ன சொல்ல முடியும். திருடனுக்குத் தேள் கொட்டியது போலச் சும்மா போய்விட்டான்.

மோஹன் நேரே வீட்டிற்குப்போய் தன் தாயாரையும் அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்று சீட்டைக் காட்டினன். வைத்தியர்கள் பார்த்துப் பின் அவனே அங்கேயே வைத்துக்கொண்டு வெகு அக்கரையாகக் கவனித்து வந்தார்கள்.

கல்யாணியம்மாளுக்கு இரவு பகல் தூக்கமில்லை. தன்னருமை குமாரனுக்கு உடம்பு குணமாக வேண்டுமே என்று கடவுளை வேண்டிக்கொண்டே இருக்கிறாள். நாட்கள் ஒன்றிரண்டாகச் செல்கின்றன. ஆனல் மோஹனுக்குக் குணம் மட்டும் ஏற்படவில்லை. ராஜமும் தினம் தன் காரியாலயத்திற்கு வரும் தொழிலாளிகளை அடிக்கடி விசாரித்து வருவதோடு ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்து வரும்படியாயும் தெரிவிப்பாள். அப்படியே இரண்டொருவர் செய்வார்கள்.

15 தினங்கள் கொடுத்த லீவு முற்றும் ஆய்விட்டது. மோஹனுக்கு டைபாய்டு ஜுரமென்று தெரிவித்து விட்டார்கள். இதற்கு மேல் லீவுக்கு என்ன செய்வான். சில சமயம் நினைவுகூட இல்லாமல் அத்தகைய காய்ச்சல் காயும்போதும் அவனுடைய தொழிற்சாலையை மட்டும் மறக்கவில்லை. "நாளையுடன் 15 நாட்களும் முடிவாய் விடுகிறதே ; என்ன செய்வேன் ?'' என்று கவலைப்பட்டு மற்ற தொழிலாளியிடம் தெரிவித்து விசனித்தான். இதை யவர்கள் ராஜத்தினிடம் கூறினர்கள்.

மகா தயாள குணம் நிறைந்த ராஜம் மிக்க கருணையுடன் அவர்களை நோக்கி, "ஐயா! அவரை இன்னிலைமையில் விசனப்படவேண்டாமென்று சொல்லுங்கள்'' என்று மாத்திரம் கூறி யனுப்பிவிட்டு, அன்று மாலையில் வெகு தைரியத்துடனும், அனுதாபத்துடனும் ஆஸ்பத்திரிக்கு வந்து, மோகன் படுத்திருந்த வார்டை விசாரித்துக் கொண்டு வந்து சேர்ந்தாள்.

கல்யாணியம்மாள் வீட்டிற்குப் போயிருந்தாள் ; மோஹன் மட்டும் படுத்திருந்தான். தலையில் ஐஸ் பையை வைத்திருந்தது. ஒரு தாதி அடிக்கடி வந்துபோய்க் கொண்டிருந்தாள். மற்ற நோயா

ளிகளைப் பார்க்க அவரவர்களின் மக்கள் வந்துகொண்டும் போய்க் கொண்டுமாக இருக்கிறார்கள்.

ராஜம் அங்கு வந்த தாதியை நோக்கி இவருக்கு எப்படி இருக்கிறது என்று ஆங்கிலத்தில் கேட்டாள். "ஜுரம் இன்னும் இறக்கு முகமில்லை. இந்த வாரத்துக் கடைசிக்குள் இறங்கிவிடுமென்று நினைக்கிறேன். டாக்டரும் அப்படித்தான் சொல்லுகிறார். பயமொன்றுமில்லை என்று கூறுகிறார். ஆனால் வந்திருப்பது என்னவோ வெகு மும்முரமாகத்தா னிருக்கிறது. இவர் மிகவும் நல்லவர். இவருடைய தாயார் மகா உத்தமி; மிக்க நற்குணமுடையவள்" என்று கூறினாள்.

இந்த பேச்சுக் குரலைக்கேட்டு மோஹன் கண் விழித்துப் பார்த்தான். பொற்கொடியோ! பூங்கொம்போ! என்று ஐயுறும்படி அங்கு நிற்கும் ராஜத்தைக் கண்டு அவன் தன்னையே நம்பாது பிரமித்தான். "அம்மணீ...அம்மணீ! தாங்களா வந்திருக்கிறீர்கள். தாங்களா நிற்கிறீர்கள். நான் பரம ஏழை! தங்களின் பணியாள். இவ்வேழையைப் பார்க்கத் தாங்கள் வந்ததை நான் என்னென்று கூறுவேன்?" என்று வெகு மரியாதையுடன் கேட்டான்.

ராஜம்.—அதெல்லாம் ஒன்றுமில்லை. இந்த பெரிய வார்த்தைகளுக்கெல்லாம் இப்போது சமயமல்ல. ஈசனுக்கு முன்பு எல்லோரும் ஒன்றுதான். தங்கள் உடம்பு எப்படி இருக்கிறது. லீவு ஆய்விட்டதைப்பற்றி வருத்தப்பட்டதாக தொழிலாளிகள் தெரிவித்தார்கள். உடம்புக்கும் உயிருக்கும் மிஞ்சிதான் மற்றது. ஆகையால் கவலைப்பட வேண்டாம். இதோ ஒரு மாத சம்பளத்தைச் செலவுக்கு வைத்துக்கொண்டு, உங்கள் உடம்பு நன்றாகக் குணமடைந்த பிறகு வேலைக்கு வாருங்கள்; கவலை வேண்டாம். இதைத் தெரிவித்துவிட்டுப் போகவே நேரில் வந்தேன். ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள்." என்று வெகு நயமாயும் அன்பாயும் கூறினாள்.

அவனுக்கு இன்ன துபதில் சொல்வதென்றே தெரியவில்லை. ராஜத்தின் மகா உன்னதமான குணத்தழகையும் காருண்யப் பது

மையாக விளங்கும் அற்புதத்தையும் கண்டு அளப்பரிய ஆச்சரிய சாகரத்தில் மூழ்கினன். ஏதேதோ பேச எண்ணுகிருன். தடமாடுகிறது."அம்மணீ...அம்மணீ இந்த வேலைக்காரனிடம் தாங்கள் காட்டும் அன்பிற்கு நான் என்னதான் பதில் பேசுவதென்று தெரியவில்லை. ஒரு அற்ப அதிகாரம் படைத்தவர்களெல்லாம் என்ன ஆட்டம் ஆடுகிருர்கள். தாங்கள் நிறைந்த குடம் நீர் ததும்பவில்லை ......என்று பேச மாட்டாத ஆயாஸத்துடன் கூறினன்.

ராஜம் "சரி, சரி; இந்த உபசாரமெல்லாம் கிடக்கட்டும். நான் வருகிறேன்" என்று மோஹனுக்குத் தேறுதல்கள் சொல்லி தாதியிடமும் வைத்தியரிடமும் நன்கு கவனித்துக்கொள்ளும்படியாகக் கூறிவிட்டுப் பின்னர் புறப்பட்டு வீதிக்கு வந்தாள்.

தன் மோட்டாருக்கு எதிரில் மானேஜரும் தன் அண்ணனும் வேறெரு மோட்டாரில் உட்கார்ந்தபடி இவளைக் கவனிப்பதை நன்கு அறிந்துகொண்டு சற்றும் தியங்காமலும், அஞ்சாமலும் தன் காரைத் தானே விட்டுக்கொண்டு போய்விட்டாள். க்ருஷ்ணனும் நாகலிங்கமும் ஒருவரை யொருவர் பார்த்தபடியே தங்கள் வண்டியையும் விட்டார்கள். இருவர் முகங்களும் குழப்பத்தி லாழ்ந்திருந்தன.

ராஜம் வீட்டிற்கு வந்தாள். இவர்களைச் சற்றும் கவனியாது வழக்கம்போல் தன் வேலையைக் கவனிக்கப் போய்விட்டாள். அன்றிரவு ராஜம் போஜனம் செய்துவிட்டு தன்னறையில் கட்டிலில் படுத்தபடியே ஏதோ புத்தகத்தைப் படித்துக்கொண் டிருக்கையில் க்ருஷ்ணன் அங்கு வந்தான். ராஜம் முதலில் கவனிக்கவில்லை எனினும், பின்னர் கவனித்து எழுந்து உட்கார்ந்து "இதென்ன திடீரென்று இங்கு வந்தாய்?" என்ருள்.

க்ருஷ்—ராஜம்! உன்னைக் கண்டிக்கவே நான் வந்தேன். உன் செய்கைகளை பலதரம் நான் கண்டித்திருக்கிறேன். நீ அவைகளை சற்றும் கவனியாதும் மதிக்காதும் நடக்கிருய். நீ எதற்காக ஆஸ்பத்திரிக்குச் சென்ருய்? அதை முதலில் தெரிவிக்கவேண்டும்.

ராஜம்.—(ஒருவாறு நகைத்துக்கொண்டே) மனிதப் பிறவிக் குற்ற காருண்யத்திற்காகச் சென்றிருந்தேன். ஏன் அதற்கென்ன?

க்ருஷ்.—அதற்கென்னவா? ஜீவ காருண்யம்! எந்த ஜீவனுக்கு நீ அங்கு காருண்யங் காட்டி கடாக்ஷிக்கச் சென்றிருந்தாய்? இவ் வடாத செய்கை மிகவும் நகைப்பிற்கும் அவமானத்திற்கும் இட மாகி விட்டது! சீச்சீ. துர்ப்புத்தி கொண்டு அலைவது ஓர் அழகா! அந்த அல்பன் ஆஸ்பத்திரியி லிருப்பதால் நீ அங்கு சென்று வந்த ரகஸியம் யாருக்கும் தெரியாதென்று நினைத்து மறைக்கிறாயா! அங்கு வந்த பெரிய மனிதர்களெல்லாம் 'உன் தங்கை எதற்காக ஆஸ் பத்திரிக்கு வந்திருக்கிறாள். யாருக்கென்ன உடம்பு?' என்று என் னைக் கேட்கும்போது தலை இறக்கமாக விருந்தது. நீ செய்யும் காரி யத்தைப் பெரியார் என்கிற தடிப் பிணங்கள் கண்டித்தாலல்லவோ உனக்கு புத்தி வரும். தலைமேல் ஏற விட்டு கொழுப்பை வளர்க்கி றார்கள்.

182989

ராஜம்.—(இடைமறித்து) க்ருஷ்ணா! போதும்! போதும்! மிக்க சந்தோஷ மடைந்துவிட்டேன். உனக்கும் நன்மை தீமை தெரிந்து என்னைக் கண்டிக்க வந்ததற்காக மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அம்முறையை உனக்கு முதலில் சரியானபடி அனுஷ்டித்துக் கொண்டு பிறகு பிறருக்கு உபயோகப்படுத்து. நான் பலதரம் உனக் குக் கூறியபடியே இன்றும் கூறுகிறேன். நீ அனாவசியமாக என் விஷயத்தில் தலையிடாதே. என்னை நான் கவனித்துக்கொள்ள எனக்குத் தெரியும். உன் தயவு உனக்கே இருக்கட்டும். வீணாக மனஸ்தாபப் படாதே; நீ சென்று விடு. உன் சகவாச தோஷமும் செய்கையும் எப்படி இருக்கிறதென்பதை நன்கறிந்து அதை முத லில் திருத்திக்கொள்ளு. அது போதும். எனக்குத் தூக்கம் வருகி றது; நீ எழுந்து போ.

க்ருஷ்.—போதும் உன் வேதாந்தம். நீ இக்காரியாலயத்தின் கண்ணியத்தையே குலைத்துவிடுகிறாய். இச்செய்கை எல்லாம் போதா மல் பணத்தைத் திருடி சில சாதனங்களுக்குக் கொடுப்பதையும் நான் கண்டு பிடித்துவிட்டேன். இச்செய்கையை நீ மறைக்கவே முடியாது.

ராஜம்.—(ஏளனமாக நகைத்துக் கொண்டே) ஓகோ! நீ சொத்துக்கு அதிகாரியாகையினுல் கனிகரத்துடன் கவனித்து வருகிறுய். பாவம்! நான் களவாடியதைக் கண்டு பிடித்துவிட்டாயே! ஏன் என்னைக் கைது செய்யலாகாது.....சிச்சி...பேதையே! உன் புத்தியைப் போலத்தான் உனக்குத் தோன்றும். தந்தையின் பர்ஸிலிருந்து 100 ரூபாயைத் திருடியது போல என்னையும் எண்ணினுயா? பேசாது போய்விடு. இதோ தந்தையின் கைப்பட உத்தரவுபாரு. இந்த வேலையை இன்னொரு க்ளார்கு செய்தால் குறைந்தது 40 ரூபாயாவது சம்பளம் கொடுக்கவேண்டும். அதை நானே செய்வதால் பெண்பிள்ளை என்கிற மதிப்பால் மாதம் 50 ரூபாய் எனக்குச் சம்பளமாகக் கொடுக்கிறுர். அதை நான் எனது இஷ்டம்போல தர்ம பாடசாலைக்கு, ஏழைக் குழந்தைகளின் பால் நிதிக்கு, அனுதை நிலயத்திற்கு, தர்ம ஆஸ்பத்திரிக்கு, பிச்சைக்காரர்களுக்கு இன்னும் தர்ம விஷயங்களில் எனக்கிஷ்டமான வகையில் தந்தைக்குத் தெரிந்து அவருடைய பரிபூரண அபிமானம் பெற்றே செலுத்தி வருகிறேன். வீணுக விஷயத்தைத் தெரியாமல் உளறுதே....எழுந்து போ...என்று கடிந்து பேசினுள்.

இதைக் கேட்ட கிருஷ்ணனுக்கு சற்று வியப்பு உண்டாகி விட்டது. அச்சமயம் வேறு எதுவும் பதில் சொல்லாமல் விரைக்க விரைக்கப் பார்த்த வண்ணமே போய்விட்டான். இதை ராஜம் ஓர் பொருட்டாகவே நினைக்கவில்லை. அன்று அவளுடைய மனதில் வேலை செய்வதெல்லாம் மோகன் படுத்திருந்த கண்ராவியான பரிதாபப் படுக்கையின் காட்சியே யாகும்.

உலகத்தில் ஏழை, பணக்காரர்கள், கர்வம், அகம்பாவம் முதலிய வித்யாசங்கள் வளர்ந்து வருவதானது அவளுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. பாழும் சாண் வயிற்றுக்காகவன்ரே ஏழை மக்களின் தவிப்பும், அடிமைப் பிழைப்பும்! என்னே பரிதாபம்... என்னே சுயநலம். க்ருஷ்ணன் இம்மாதிரி அடிக்கடி என்னை வந்து கடிந்துபேசுவது முற்றும் எந்த துர்ப்புத்தியின போதனையினுலோ செய்யும் செய்கையே யன்றி வேறில்லை. இருக்கட்டும்" என்று தனக்குள் எண்ணியபடியே படுத்துவிட்டாள்.

வேலை நிமித்தம் வெளியூருக்குச் சென்றிருந்த தர்மலிங்கம்

வந்துவிட்டார். அவரிடம் ஒன்றுக்குப் பத்தாகக் கயிறு திரிப்பதற்காக நாகலிங்கம் காத்துக்கொண்டிருந்தான். ஆனால் தர்மலிங்கம் ராஜத்தினிடம் தன் உயிரெல்லாம் வைத்து நேசிப்பதால் திடீரென்று ஏதும் செய்துவிட முடியாது யோசனையில் இருந்தான்.

ராஜம் தன் தொழிலாளர்களுக்கு லீவு கொடுத்ததும், உடம்பு காய்ச்சலால் கஷ்டப்படுவதும் எல்லாம் ஒன்று விடாமல் சொல்லி விட்டாள். தர்மலிங்கமும் தர்ம சிந்தனை மிகுந்தவராதலால் இவைகளைக் கேட்டு வெகு சந்தோஷப் பட்டார். எந்த வகையிலும் தர்மத்தையும், சத்தியத்தையும் வழுவாது செய்வதுதான் உத்தமம் என்று நீதியை போதனை செய்தார். தர்மலிங்கமே மோகனனையும் மற்றையோரையும் ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்துவிட்டு வந்துவிட்டதால் நாகலிங்கம் விழித்துவிட்டான்.

இதற்குப் பின் ஒரு மாத காலம் ஓடிமறைந்தது. மோகனன் உடம்பு சற்று குணமாகி வீட்டிற்கு வந்தான். பிறகு மெல்ல ஆபீஸுக்கு வேலைக்கு வந்து சேர்ந்தான். மிகுந்த பலஹீனப் பட்டிருப்பதால் அதிகமாக வேலைசெய்ய முடியாது கஷ்டப்பட்டுத் தன்னால் முடிந்தவரையில் செய்ய ஆரம்பித்தான்.

அன்று மாலை தர்மலிங்கமும் ராஜமும் மோகனை நேரில் விசாரித்து உடம்பை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளும்படிக்கும், அதிகமாக ச்ரமப்பட வேண்டாமென்றும் அன்புடன் கூறினார்கள். இதைக்கண்ட நாகலிங்கத்தின் ஆத்திரம் அதிகரித்தது. ஆனால் அதை எங்ஙனம் வெளிக்கு காட்டிக்கொள்ள முடியும். உள்ளுக்குள்ளேயே குமுறினான்.

மோக.—ப்ரபோ! ஏதோ உங்கள் தயவால் இம்முறை தப்பிப் பிழைத்தேன். எல்லாம் உங்களுடைய அன்பும் ஆசீர்வாதமுந்தான்.

தர்ம.—அதொன்றுமில்லை. ஈசனின் கிருபை இருக்கவேண்டுமென்று கூறு. அதுதான் முக்கியமானது.

ராஜம்.—இவர் படுத்திருக்கையில் இவா பிழைப்பாரென்று நான் நினைக்கவே இல்லை. இவருடைய தாயார் செய்த பாக்கியந்தான் பிழைத்தார். அப்பா! உடம்பு எப்படி துரும்புபோலாய்

விட்டது பாருங்கள். இன்னும் ஒரு வாரத்திற்கு லீவு கொடுங்கள். சற்று தேற்றிக்கொண்டு வரட்டும்.

தர்ம.—குழந்தாய்! நீ சொல்வதற்கு முன்பே நான் அதை நினைக்கவில்லை என்று எண்ணுகிறாயா? நான் இவனை காலையில் பார்த்தது முதல்தான் யோசித்தேன். நாம் இப்போது இவனுக்கு லீவு கொடுத்தால் இவனிடம் ஏதோ ப்ரத்யேகமான அன்பு காட்டுவதுபோலும் மற்றையோரை வேறுவிதமாக நடத்துவதுபோலும் மற்ற தொழிலாளருக்குத் தோன்றிவிடும். அப்புறம் அவர்களும் அடிக்கடி லீவு கேட்பார்கள். ஆதலால் பேருக்கு தினம் வந்துவிடு. வேலைகள் மட்டும் அதிகம் செய்யவேண்டாம்'' என்றுகூறிச் சென்றுவிட்டார்.

ராஜம்:—உட்காருங்கள். யாருக்கு மரியாதை! இந்த பல ஹீனமான நிலைமையில் நிற்பது கூடாது; ஆஸ்பத்திரியில் உங்களை சரியாகக் கவனித்தார்களா? என்ன செய்தார்கள்?

மோஹன் :—அம்மணீ! அதெல்லாம் எதற்குக் கேட்கிறீர்கள்? விட்டுவிடுங்கள்; வேண்டாம்.

ராஜம் :—ஏன் என்ன சமாச்சாரம். என்ன நடந்தது?

மோஹன் :—ஒன்றுமில்லையம்மா! எங்குமே—எல்லோருமே—தங்கள் பிதாவைப்போலவும் தங்களைப்போலவும் ஏழைகளிடத்தில் அன்பு காட்டுபவர்களாய் இருக்க முடியுமா! உலகம் பலவிதம். என்னைப்போல பரம தரித்திரன் என்றால் ஆஸ்பத்திரியில் எங்ஙனம் சரியாக கவனிக்க முடியும். ஆஸ்பத்திரிகள் பேரளவில் தர்ம ஆஸ்பத்திரி என்ற நாமத்துடன் இருக்கின்றனவேயன்றி உண்மையில் ஏழைகளுக்கு தர்மத்திற்குப் பாடுபடக் காணவில்லை.

குப்பையள்ளும் தோட்டி முதல் நர்ஸ் வரையிலும் கையில் அவ்வப்போது பணத்தை வைத்துக்கொண்டே இருந்தால்தான் சிறிது கவனிக்கிறார்கள். இல்லையேல் சவத்திற்கு ஒப்பாகத்தான் கிடக்க வேண்டும். இன்றைக்கெல்லாம் முட்டிக்கொண்டாலும் உபயோகமில்லை. அவர்கள் ஏற்கெனவே அங்ஙனமிருக்கையில் இன்னும் சில துஷ்டர்களின் தூண்டுதல் இருந்தால் பின்னும் கேட்க வேண்டுமா!

ராஜம் :—துஷ்டர்களின் தூண்டுதலா! எனக்குப் புரிய

வில்லையே! எந்த துஷ்டர்கள்! என்ன செய்தார்கள்? தியங்காமல் சொல்லுங்கள்.

மோஹன்:—அம்மணீ! இவ் விஷயங்களை இப்படியே விட்டு விடுவது நலம். இதை வீணே விஸ்தரிப்பதில் லாபமில்லை, மன்னிக்க வேண்டும்.

ராஜம்:—இல்லை. பரவாயில்லை. ஒருவிதமான பாதகமும் இல்லை. சொல்லுங்கள்.

மோஹன்:—அம்மணீ! இந்த காரியாலயத்து மானேஜர் நாக லிங்கமும், தங்கள் சகோதரரும் அங்கு வந்து தாதியுடன் என்னைப் பற்றி வெகு இழிவாயும், கேவலமாயும், அபாண்டமாயும் ஏதேதோ கூறினர்களாம். அதை என் தாயாரே கவனித்துவிட்டாளாம். ஏழைக் கிழவி கவனித்து என்ன செய்ய முடியும்? அந்த தாதியும் மற்ற யாருமே என்னை அதன் பிறகு கவனிக்கவே இல்லை. எங்கோ ஒரு கோடியில் கொண்டு போட்டுவிட்டார்கள். ஆயுள் நல்ல கெட்டியாகையினல் பிழைத்துக்கொண்டேன். உம்.... அவைகளைப் பற்றி தயவு செய்து இம்மட்டுடன் விட்டு விடுங்கள்.

ராஜம்:—(மனம் பதைக்க ஆத்திரத்துடன்) ஆஸ்பத்திரியில் வந்தா விஷமத்தனம் செய்தார்கள். என்ன அனியாயம்! இதை ஏன் நீர் என் தந்தையிடம் தெரிவிக்கவில்லை...

மோஹன்:—(இடை மறுத்து) அம்மணீ! தயவு செய்யவேண்டும். தாங்கள் கட்டாயப்படுத்திக் கேட்டதனல் இதைத் தெரிவித்தேனே யன்றி இதைக் கூறவதாகவே இல்லை. என்னுடைய ஏழ்மையின் இளைப்பத்தினல் அவர்கள் கூறினர்களேயன்றி அவர்கள்மீது குற்றமே இல்லை. அம்மணீ! உங்களை நான் மிகவும் வேண்டிக் கொள்கிறேன். இதை இம்மட்டும் விடுங்கள்—என்று கெஞ்சிக் கேட்டான்.

ராஜம்:—மிஸ்டர் மோஹன்! உங்களுடைய பொறுமைதான் உங்களைக் காப்பாற்றியது. உங்களைக் கைதீண்டி ஒரு காலத்தில் அடித்ததமன்னியில் இப்படியும் செய்ததை என்னென்று கூறுவது? இவைகளெல்லாம் ஏழை, பணக்காரர்கள் என்ற முறையில் நடப்

பதல்ல. அவர்களின் துஷ்டத்தனத்தின் விபரீதப் போக்கினால் நடப்பதாகும். இருக்கட்டும்......மிஸ்டர் மோஹறன்! நல்ல புஷ்டியான ஆகாரங்களைச் சாப்பிட்டு உடம்பைச் சரியாகத் தேற்றிக் கொள்ளுங்கள். உங்களைப் பார்த்தால் அடையாளமே தெரியாமல் உருமாறிவிட்டது. உத்தமமானவர்கள் உலகத்திற்கு வெகு உதவியாளர்கள். ஆகையினால் உடம்பைக் கவனியுங்கள்.

மோஹறன் :—அம்மணி! 25 ரூபாய் சம்பளத்தில் 5 ரூபாய் குடிக்கூலி போய்விட்டால் மிச்சம் 20 ரூபாய். அதில் முன்பு பட்ட சிறிது கடனுக்காக 8 ரூபாய் மாதம் கொடுத்துவிடுகிறேன். 12 ரூபாயில் நாங்களிருவரும் தினம் ஒரு வேளையாவது தவறாமல் அரை வயிறு கஞ்சி சாப்பிட்டுப் பிழைத்து வருகிறோம். உயர்ந்த ஆகாரம் பரம தரித்திரனாகிய நான் எங்ஙனம் சாப்பிட முடியும். இந்த வேலையாவது இச்சமயம் போய்விடாமல் தங்கினால் போதும் என்று நான் பகவானை ப்ரார்த்திக்கின்றேன். என் தாயாருடைய தள்ளாத வயதில் அவளைக் கவலைக்காளாக்காமல் காப்பாற்றும்படியாகக் கடவுள் க்ருபை செய்தால் போதும். என்று மனமுருகிச் சொல்லும் போது அவனுக்கு விசனம் பொங்கி வந்துவிட்டது.

ராஜத்திற்கும் ஏழ்மை நிலைமையின் பரிதாபத்தைக் கேட்டு நெஞ்சம் உருகியது. அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. சிறிது நேரம் மவுனமாக நின்றாள். அடுத்த விநாடி சிறிது தயக்கத்துடன் "மிஸ்டர் மோகன்!. தயவு செய்து தாங்கள் இதை மறுக்காது பெற்றுக்கொள்ளக் கோருகிறேன். வித்யாசமாக எண்ணிவிட வேண்டாம்!" என்று கூறியவாறு தன் கை பர்ஸிலிருந்து 10 ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து நீட்டினாள்.

இதைக் கண்ட மோஹறன் வெகு பெருந்தன்மையாயும் மரியாதையாயும் "அம்மணீ! உங்களுடைய உதார குணமும் அன்பும் எனக்கு என்றுமிருந்தால் போதும். என்னை மன்னிக்க வேண்டும். எனக்கு வேண்டாம். என்னுடைய உழைப்பினால் வரும் வருமானத்தை யின்றி மற்றதை அனாவசியமாக நான் பெற்றுக் கொள்ள மாட்டேன்." என்று கண்டிப்பாய் மறுத்துக் கூறிவிட்டான்.

பரம ஏழையாயினும் உன்னதமான உயரிய குணத்தின் அழகைக் கண்டு ராஜம் ப்ரமித்தாள். அதிக செல்வத்தில் பிறந்தும் தன் சகோதரன் தன் தந்தையின் பெட்டியிலிருந்தே பணத்தைத் திருடிக்கொண்டு செல்லும் துர்க்ருத்யம் அவள் கண் முன்பு தாண்டவமாடியது. அதற்குமேல் அவளால் கட்டாயப்படுத்த முடியவில்லை. மோஹனின் அபாரமான உயரிய குணத்தின் போக்கையே எண்ணி தம்பித்துவிட்டாள். மோஹனனும் ராஜத்தின் நிலைமையைக் கண்டு அவளை நோக்கியபடியே அசைவற்றுவிட்டான்.

9-வது அதிகாரம்

கரைப்போர் கரைத்தால் கல்லும் கரையும்

உலகத்தில் மக்களுக்கு தாம் பிடித்த காரியம் நன்மையாயினும் தீமையாயினும் அதைச் செய்து முடிக்கும் நோக்கத்தில் ஓரே பிடிவாதம் உண்டாவது சகஜமல்லவா! அதுபோல நாகலிங்கத்தின் நினைவு சதா மோஹனையும் ராஜத்தையும் கவனிக்கும் எண்ணத்திலேயே ஈடுபட்டிருந்ததால் ஆபீஸ் வேலைகள் கூடச் சரியாக கவனிக்கமுடியாது போய்விட்டது. எனினும் தன் எஜமானரிடம் வெகு தளுக்காயும் அவருக்குத் தன்னிடம் பதிந்துள்ள ஆழமான நம்பிக்கைக்குச் சிறிதும் பங்கமில்லாமலும் இன்னமும் தன்னை வெகுவாய் நம்பும்படியும் நடந்துவருவதில் சற்றும் பிறழவில்லை.

மோஹனும் ராஜமும் சாதாரணமாக தினம் வழக்கம்போலச் சந்தித்துப் பேசுவதை எல்லாம் மிக்க க்ரூரமாக கவனித்து அதைப் பற்றி சந்தானக்ருஷ்ணனிடம் அடிக்கடி காண்பித்தும் பேசியும் அவனுக்கு ஏற்கெனவே இருந்த பொறாமையையும் பேத அபிப்ராயத்தையும் வளர்க்கும் கருவியாக மாறினன். சந்தானக்ருஷ்ணனுக்கு பூர்ண வித்யாசத்தை உண்டாக்கிவிட்டால் அவன் சகோதரியைக் கட்டாயம் தனக்கே விவாகம் செய்துவைப்பான். அதன் மூலம் சந்தானக்ருஷ்ணனையே ஏமாற்றி வியாபாரத்தின் உளவறிந்து ஏராளமான பொருளைச் சம்பாதித்துக் கொள்வதோடு தர்மலிங்கத்திற்கும் பிள்ளைக்கும் விரோதத்தைக் கிளறி க்ருஷ்ணனின் அக்ரமத்தை

எல்லாம் காட்டி அவருடைய வெறுப்பை அதிகரிக்கச் செய்து விட்டால் தர்மலிங்கம் தன் சகல சொத்தையும் பெண்ணுக்கே கொடுத்துவிடுவார்; தானே அதற்கும் அதிகாரியாகி விடலாம் என்பதே அவனுடைய ஆழ்ந்த கருத்தாகிவிட்டது. ஆதலால் அவன் அந்த உத்தேசங்கொண்டே தன் காரியத்தைச் செய்ய 'காக்காய்' பிடித்து வந்தான்.

மோஹன் தனக்கே எங்கே முட்டுக்கட்டையாக வந்து விடுவானோ என்கிற பயமும் திகிலும் பூர்ணமாகப் பிடித்துவிட்டது. இதைப்பற்றியே சதா யோசனை செய்து செய்து ஒருவிதமான முடிவிற்கு வந்தான். மோஹன் வழக்கம்போல வேலைகளை முடித்துக் கொண்டு மறுநாள் பத்திரிகைக்காகத் தான் எழுதியுள்ள ஓர் கட்டுரையை தர்மலிங்கத்தினிடம் காட்டும்பொருட்டு அங்கு வந்தான்.

அங்கு தர்மலிங்கம் இல்லாது ராஜம் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள். மோஹனனைக் கண்டதும் "மிஸ்டர் மோஹன்! வாருங்கள். என்ன சமாச்சாரம்?" என்றாள்.

மோஹன்:—(மரியாதையாக தான் கொண்டுவந்த கட்டுரையைக் கொடுத்து) இதைத் தங்கள் பிதாவிடம் காட்டுவதற்காகத்தான் வந்தேன். இதைத் தாங்கள் பார்த்துக் கொடுத்துவிட்டால் நாளைக் காலையிலேயே வேலைக்குக் கொடுத்துவிடலாம்.

ராஜம் ;—இந்தக் கட்டுரை வெகு நன்றாக இருக்கிறதென்றும் உடனே ப்ரசுரிக்கலாம் என்றும் இதோ மார்கு கூடச்செய்திருக்கிறதே! இதைப் பார்க்கவில்லையோ!

மோஹன் :—அடாடா! நான் பார்க்கவில்லையே! யார் இதைப் படித்து மார்க்குப் போட்டிருக்கிறார்கள்? இதை நான் யாரிடமும் கொடுக்கவில்லையே! எப்படி இதில் மார்க்கு போட்டிருக்கிறது?

ராஜம் :—(நகைத்துக்கொண்டே) நீங்கள் என்னவோ ஒருவர் கையிலும் கொடுக்கவில்லை. நீங்கள் சாப்பாட்டிற்குச் சென்றிருந்த சமயம் நான் ஒருவேலையாக அங்கு வந்தேன். பலமான காற்றடித்து உமது இக் கட்டுரை மேஜைமீதிருந்து கீழே விழுந்தது. அதை எடுத்துவைத்தேன்; அப்போது இதன் தலையங்கம் கண்ணில் பட்டது. உடனே அதை வாசிக்கவேண்டி மனம் தூண்டியது. அவ்விடத்திலேயே உட்கார்ந்து படித்து மார்க்கும் போட்டுவிட்டு வந்தேன். இந்த சில வரிகள் அனாவசியமென்று தோன்றியதால் அவைகளை

அடித்துவிட்டேன். அவற்றிற்குப் பதில் இரண்டு வரிகள் சேர்த்திருக்கிறேன். அதிகப்ரஸங்கித்தனமாக இவ்விதம் செய்ததற்கு மன்னிக்க வேண்டும்.

மோஹன் :—அம்மணீ! இதென்ன இப்படிச்சொல்கிறீர்கள்! எப்படியும் தாங்கள் பார்வையிடவேண்டியதுதானே! இதற்காக மன்னிப்பதாவது. விஷயம் உங்களுக்குப் பிடித்தமாயிருந்ததே அதுவே போதும்.

ராஜம் :—மிஸ்டர் மோஹன்! தாங்கள் எட்டு வகுப்பு வரையில் தான் படித்ததாகச் சொல்லுகிறீர்கள். ஆனால் உங்கள் எழுத்துத் திறனைப் பார்த்தால் மிகவும் பெரிய படிப்பாளிகளின் கைத்திறத்தைப் போலவிருக்கிறது. இதற்கெல்லாந்தான் தனிப்பிறவி, தனி அம்சம் (gift) என்கிறார்கள். உங்கள் அன்னையார் படிப்பறிந்தவர்கள்தானே! மகன் எழுதியதைக்கண்டு சந்தோஷப்பட்டுப் பூரித்துவிடுவார்கள்.

மோஹன் :—இவ்வார்த்தைகள் மோஹன் மனத்தைத் துளைத்தன. தனக்கு உண்மையில் இத்தகைய புகழ் இருக்கிறதாவென்று அவன் உள்ளமே வியந்தது. தன்னைப் பெற்ற தாய் இல்லாது மறைந்துவிட்ட துயரம் சற்று வருத்தியது. எனினும் கல்யாணியம்மாளின் கரைகாணாத அபார அன்பின் அலைகள் மனதில் மோதியவுடன் அவன் விசனம் ஒருவினாடியில் மாறிவிட்டது. உடனே அவன் பேசத்தொடங்கி "அம்மணீ! என் தாயாருக்கு சுமாராகப் படிப்பு தெரியுமேயன்றி பெரிய படிப்பாளியல்ல. அதோடு அவர்களுக்கு சிலகாலமாக கண்ணில் கோளாறு ஏற்பட்டு வருந்துகிறார்கள். அதனால் படிக்கவோ, பார்க்கவோ முடிவதில்லை. ஏதேதோ வைத்யங்கள் செய்துகொண்டுதான் வருகிறேன். ஒன்றிலும் நீடித்த குணம் தெரியவில்லை.......டெலிபோன் மணியடிக்கிறது. நீங்கள் பேசுங்கள். நானும் சென்றுவருகிறேன்—என்று கூறிவிட்டுச் சென்றான்.

வீதிகேட்டுக்கு முன்புறமுள்ள தோட்டத்து பளிங்காஸனத்தில் வெகு ஒய்யாரமாயும் வாயில், சிகரெட்டு பிடித்துப் புகையை வானளாவு வரையில் விட்டுக்கொண்டும் மெய்மறந்த பரம பக்தன் போல உட்கார்ந்திருந்த நாகலிங்கம் மோஹன் தலைகுனிந்தவாறு செல்வதைக் கண்டு ஒருநாளும் இல்லாது திருநாளையப் போல கையைத் தட்டி மோஹனனைக் கூப்பிட்டான்.

தன்னை யார் கூப்பிடுகிறதென்று மோஹனன் திரும்பிப் பார்த்தான். நாகலிங்கமாக விருப்பதை நோக்கி வெறுப்புடன்

அவன் முன்பு வந்து மரியாதையாக நின்று "என்ன விசேஷம்!" என்றான்.

நாகலிங்கம்:—மோஹன்! என்னைக் காணும்போதே நீ ஏதோ வெறுப்புடன் பார்ப்பதாகவன்றோ தோன்றுகின்றது. நான் உத்யோக முறையில் ஒருவிதமான கண்டிப்புடன் இருப்பினும் உண்மையில் உன் வேலைத் திறமும், எழுத்து அழகும் என்னைப் பரவசமுறச் செய்கின்றன. இப்பொழுது உன்னை அழைத்ததுகூட உன்னுடைய நலனைக் கோரி உனக்கு சில விஷயங்களைக் கூறுவதற்குத்தான் கூப்பிட்டேன்.

அதாவது, உனது திறமையைப் பற்றி எஜமானர் சந்தோஷப்பட்டுத்தான் உனக்கு வெகு விரைவில் இதுகாறும் யாருக்கும் கொடுக்காத உதவி ஆசிரியர் வேலையைக் கொடுத்தார். அவர் செய்ததற்கு ப்ரதியுபகாரமாக அவரது மனம்போல நடக்காமல் நீ அவர் மனவிரோதமாக நடக்கும் நடத்தையை அவர் கண்டு வெறுப்பதை நீ இன்னமும் அறியாமலிருப்பது மிக்க வருத்தத்தக்கது.—என்று கூறி முடிப்பதற்குள் மோஹன் திடுக்கிட்டான். "ஐயோ! நானு எஜமான் மனத்திற்கு விரோதமாக நடக்கிறேன்! அப்படி எதுவும் செய்ததாக எனக்குத் தெரியவில்லையே! அதென்ன விஷயம்!" என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

நாகலிங்கம்:—இருப்பா! அவசரப்படாதே! சொல்வதற்குத் தானே அழைத்தேன். அதாவது, நீ அடிக்கடி எஜமானியம்மாளைச் சந்தித்துப் பேசுகிறாயாம். அந்த நடத்தையை அவர் மிகவும் வெறுத்து உன்மீது வித்யாசமான எண்ணமும் கொண்டிருக்கிறார். நீ நேற்றைய தினம் ராஜத்தினிடம் பேசிக்கொண்டிருக்கையில் அவர் அப் பக்கம் வந்தார். அவருடைய முகத்தின் மாறுதலையும், கண்கள் நெருப்புப் பொறிபோலச் சிவந்துவிட்டதையும் நேருக்கு நேராகக் கண்டேன். உனக்கு நன்மையைத்தான் கூறுகிறேன். நீ இம்மாதிரி செய்வது சரி இல்லை என்பதை நீ அறியவேண்டும்.

மோஹனனுக்கு இதைக் கேட்டதும் ஒரு விதமான கலக்கம் உண்டாகியது. இந்த விஷயங்கள் முற்றும் இவனே கூறும் கட்டுக் கதைகள்தான். அன்று முதல் இவன் நடந்து வரும் மாதிரியை நான் கவனிக்கவில்லை என்று இவன் நினைத்திருக்கிறான். இருக்கட்டும் கடவுள் இருக்கிறார். இவன் எஜமானர்மீது பழியைப் போட்டுத் தானே இம்மாதிரி செய்கிறான் என்பதை மனத்திற்குள் எண்ணியவாறு "ஐயா! நான் சென்று வருகிறேன். எனக்கு வேலை இருக்கிறது. நான் என்னைக் கவனித்துக்கொள்ளக் கடமைபட்டிருக்கிறேன். என் மரியாதையை இழக்காமலும், கவுரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள

வும் நான் மறக்கமாட்டேன்.'' என்று கூறிக்கொண்டே போய் விட்டான்.

எனினும் இம்மாதிரி இவன் கேட்டதானது அவனுடைய மனத்தில் பெரிய கலக்கத்தையும், ஒருவிதமான திகிலையும் உண்டாக்கி விட்டதால் அதே யோசனையினுல் குழம்பிப்போய்விட்டான். இந்த மாறுதலை தன் தாயார் கண்டுகொள்ளா வண்ணம் வெகு தந்திரமாக நடந்துகொண்டான்.

மறுதினம் வழக்கம்போல நிலயத்திற்கு வந்து தன் வேலையைக் கவனிக்கத் தொடங்கினுன். ஒருகால் எஜமானர் இவ்விதம் நினைக்கும்படிக்கு இவன் செய்திருப்பாளுே என்கிற சந்தேகமும் உண்டாகியது. இந்த ரகஸியத்தை யாரிடம் கூறுவது, எப்படி உண்மையறிவது என்ற எண்ணமும் ஒரு புறம் தோன்றி சற்று கலக்கினது. ராஜத்தின் உத்தமமான குணமும், அன்பும், புத்தி விசாலமும் ஒருங்கே கூடி ஒரு புறம் அவனையறியாது வேலை செய்கின்றன.

இத்தனை குழப்பத்துடன் அன்று முற்றிலும் ராஜத்தைச் சந்திக்கவே இல்லை. இந்த செய்கை மோஹனனுக்கு வெகு கடினமாகத் தோன்றியது. "இவ் விஷயத்தை எப்படியும் ராஜத்தினிடம் தெரிவித்துவிடுவதுதான் நலம். இதை நாம் மறைத்திருந்தால் பின்பொரு சமயம் ஏதேனும் வித்யாசமே நேரிடும் இதைக் கூறி விடுவதே உத்தமம்.'' என்று தனக்குள் துணிந்து தீர்மானித்துக் கொண்டான்.

ராஜத்தைத் தனிமையில் சந்தித்துப் பேச சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். இரண்டு மூன்று நாட்களாகிவிட்டன. ராஜமும் மோஹனனின் வித்யாசத்தை முற்றும் அறியவில்லை. எனினும் வழக்கம்போலல்லாமல் ஏதோ ஒரு மாதிரி இருப்பதை மகா யூகத்துடன் அறிந்துகொண்டாள்.

மோஹன் எழுதிய கட்டுரைகளை வழக்கம்போல நேரில் கொடுக்காமல் ஒரு வேலைக்காரப் பையனிடம் கொடுத்தனுப்பினுன். அக் கட்டுரையுடன் ஒரு சிறிய துண்டு காகிதம் இருந்தது. அதில்

"அம்மணி! தங்களிடம் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேச வேண்டி இருப்பதால் பிறர் அறியாத சமயத்தைத் தெரிவித்தால் இவ்வேழைக்குப் பரம த்ருப்தியாயிருக்கும். இம்மாதிரி எழுதியதற்கு மன்னிக்கவும்.

இங்ஙனம்
தங்கள் வேலைக்கார
மோஹன்.''

என்றிருந்ததைப் பார்த்த உடனே ராஜத்தின் மனம் திடுக்கிட்டது. "இதுபரியந்தம், நம்மிடம் கட்டுரைகளை நேரில் தாராளமாய்க் கொண்டு கொடுத்துவந்தவர் இன்று ஏன் இவ்விதம் நடக்கிறார்? என்ன விஷயம் தெரிவிக்கவேண்டுமென்கிறாரோ தெரியவில்லையே!" என்று சற்று நேரம் ஒன்றுந் தோன்றாமல் திகைத்தாள்; யோசித்தாள். பிறகு அந்த பையனிடமே ஒரு சீட்டு எழுதியனுப்பினாள். மோஹனும் பதில் யாதாவது வருமென்று எதிர் பார்த்திருந்தான்; சீட்டு கிடைத்ததும் மோஹன் அச் சீட்டைப் பிரித்துப் பார்த்தான். அதில்

"ஐயா! மாலை 6-மணிக்கு என்னுடைய அறையிலேயே வந்து சந்திக்கவும்; யோசனை வேண்டாம்.

R. J. M."

என்றிருந்ததைப் படித்ததும், மோஹன் ஒருவாறு சந்தோஷமடைந்து மாலை நேரத்தை எதிர்பார்த்திருந்தான். வேலைகள் முடிந்தன. தொழிலாளிகளெல்லாம் வீட்டிற்குச் சென்றார்கள். மணி ஆறடித்ததும் பயந்து நடுங்கியபடியே மோஹன் ராஜத்தின் அறைக்குச் சென்றான். இத்தனை நாள் ஒருவிதமான பயமோ கலக்கமோ, களங்கமோ ஏதுமின்றி தாராளமாகச் சென்ற மோஹனுக்கு இன்று அவனை யறியாது ஒரு விதமான பயமும், அச்சமும், வேதனையும், துக்கமும் கூடி பாதித்தன. அவனாலேயே அதன் உண்மை யறியக் கூடவில்லை.

ராஜம் மோஹனைக் கண்டதும் "வாருங்கள் இப்படி உட்காருங்கள், ஏன் முகம் ஏதோ ஒருவாறாக இருக்கிறது? உடம்பு ஒன்றுமில்லையே! கண்களில் ஏன் நீர் வருகிறது? என்ன விஷயம்?" என்று மிகுந்த பரபரப்புடனும், ஆவலுடனும் கேட்டாள்.

மோஹன்:—(தொண்டையை அடைக்கும் துக்கத்துடன் பேசத் தொடங்கி) அம்மணீ! உடம்பு ஒன்றுமில்லை, மனதிற்குத்தான் வேதனை. அதனால் என்னை ஏதோ செய்கிறது. விஷயத்தைத் தங்களிடம் தெரிவிக்கவேண்டாமென்று பார்த்தாலும் மனம் இடங்கொடுக்கவில்லை. என்னையறியாது ஒருவித பற்றுதலும் நம்பிக்கையும் தங்களிடம் உண்டாகிவிட்டதால் இவைகளைச் சொல்லியே தீர வேண்டுமென்று உறுதி செய்துகொண்டபிறகு தான் அவ்வாறு எழுதினேன்.

ராஜம்:—தாங்கள் சொல்வது எனக்கொன்றும் புரியவில்லையே! என்ன செய்தி? வித்யாசமாகத் தங்களைப் பற்றி யார் என்ன சொன்னார்கள்? விளங்கக் கூறுங்கள்.

மோஹன் :—அம்மணீ! நாம் இருவரும் பேசுவதும், சந்திப்பதும் ஏதோ விபரீதக் கள்ளத்தனத்துடன் செய்வதாயும், நான் அயோக்யத்தனமாய் நடப்பதாயும் என்மீது தங்கள் பிதா கடுங்கோபமும், வெறுப்பும் கொண்டிருப்பதாயும் எனது நன்மையைக் கோரி எச்சரிப்பதாயும் உங்கள் காரியாலயத்து மானேஜர் வெகு நயமாக என்னைக் கூப்பிட்டுக் கூறினர். அதைக் கேட்டது முதல் என் மனம் பரிதபிக்கின்றது. அன்றொருநாள் உங்கள் சகோதரரும் அவரும் கண்ணாடியில் நம்மை கவனித்ததை நாம் பார்க்கவில்லையா! இது இவரே சொல்லும் வார்த்தையா, அல்லது என்னுடைய போதாக் காலத்தினால் உங்களுடைய பிதாவுக்குத்தான் அப்படித் தோன்றியதா என்று புரியவில்லை. எதற்கும் இவ் விஷயம் தங்களுக்குத் தெரிந்திருந்தால் நல்லது என்று தோன்றியதால் கூறிவிட்டேன்.

ராஜம் :—அப்படியா! தங்களிடமும் இம்மாதிரி தெரிவித்தானா! என்ன துணிபு! முந்திய நாள் என்னிடமும் அம் மனிதன் வந்து தங்களைப்பற்றி கேவலமாயும், அவதூறாயும் கூறி தங்களுடன் பேசுவதே குற்றமென்று என் பிதா கூறுவதாயும் தெரிவித்தான். நான் எதுவுமே பதில் கூறாது போய்விட்டேன். இந்த மனிதன் தான் ஏதோ கருத்தைக்கொண்டு இம்மாதிரி நாடகமாடுகிறான் என்று தெரிகிறது. 'அவன் தரித்திரன், ஏழை, பஞ்சை, பராரை' என்று தங்களைப் பற்றி என் சகோதரன் அடிக்கடி கூறி என்னைத் திட்டுவதுண்டு. இதை நான் சமயம் வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று பேசாதிருந்தேன்

மிஸ்டர் மோஹன்......தாங்கள் ஏன் அந்த அல்பன் கூறியதற்கு இத்தனை வருத்தப்படுகிறீர்கள்? கடவுள் ஒருவர் இல்லையா! இந்த கெடுமதிக்காரன் கலைத்து பேதிக்கச் செய்துவிட்டதினாலேயே கடவுளால் ஏற்படுத்தப்பட்ட அன்பும் அகன்று விடுமா! அதை அசைக்க ஒருவராலும் இயலாது. இந்த உண்மையை மட்டும் உறுதியாக நம்புங்கள்.

மோஹன்:—(இவ் வார்த்தையின் கருத்து மோஹனின் இதயத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. இதற்கு என்ன பதில் சொல்வதென்றே தோன்றவில்லை. தன்னைப்பற்றி அவள் சகோதரனும் வித்யாசமாக எண்ணிப் பேசுவதானது ஒரு பக்கத்தில் மிக்க துக்கமாகவே இருந்தது.) அம்மணீ! உங்கள் சகோதரர் கூறியது மிகவும் உண்மையல்லவா! பரம தரித்திரனாகிய என்னிடம் தாங்கள் தங்களுடைய அந்தஸ்தைப் பாராமல் பேசுவது இழிவுதானே! பணத்திற்குப் பணம் சரியாக நின்றாலல்லவோ சமத்வம் உண்டாகும்.

ராஜம்:—(இடை மறுத்து) மிஸ்டர் மோஹன்! உலகத்தில் பலர் பலமாதிரியான கொள்கையுடன் இருக்கலாம். அதைப்பற்றி இப்

போது எதற்குக் கூறவேண்டும், பணமும் குணமும் ஒரு நிறையாக மாட்டாது. சத்யபாமாவின் துலாபாரத்தைப் போலத்தான் ஆகும். தாங்கள் இதெற்கெல்லாம் கவலைப் படவேண்டாம். அந்த நாக லிங்கத்தின் குணமும், செய்கையும் என் பிதா அறியாவிடினும் நான் பூரணமாயறிவேன். அவன் ஏதோ ஒரு விதமான கருத்தைக் கொண்டு தான் இவ்விதமான சூழ்ச்சியிலாரம்பித்திருக்கிறுன் என்பது எனது எண்ணம். யார் என்ன செய்தபோதிலும் மலையை அசைத்துவிட யாராலும் முடியாது என்பது மட்டும் நினைவிருக்கட்டும்—என்று மீண்டும் பூடகமாகவே பேசினுள்.

ஏற்கெனவே நாகலிங்கம் தர்மலிங்கத்தினிடம் மோஹனனைப் பற்றி அடிக்கடி வித்யாசமாகவே பேசி வெறுப்பைப் பலவிதமாகக் கிளறி விட்டுக்கொண்டிருந்தான். முதலில் தர்மலிங்கம் நம்பவில்லை; எனினும் கரைப்போர் கரைத்தால் கல்லுங் கரையும் என்பதுபோல நாகலிங்கம் அவ்வப்போது சொல்லிக்கொண்டே வந்ததை ஊர்ஜிதப் படுத்துவதற்காக மோஹன் ராஜத்திற்கு எழுதிய சீட்டையும், ராஜம் மோஹனுக்கு எழுதிய துண்டுக் கடிதத்தையும் அந்த பைய னிடம் நயமாகப் பேசுவதுபோலப் பேசி வாங்கி எஜமானருக்குக் காட்டிவிட்டு அதைப் பிறரறியாதபடியே அனுப்பிவிட்டதோடு மாலையில் அவர்கள் சந்திப்பதை நேரில் காட்டுவதற்கு எஜமானைத் தயார் செய்திருந்தான்.

இந்த சூதுவாதுகள் ஒன்றுமே அறியாது களங்கமற்றிருக்கும் ராஜமும் மோஹனனும் பேசிக்கொண்டிருக்கையில் அவ்வறையின் ஜன்னலால் நாகலிங்கம் தர்மலிங்கத்திற்குக் காட்டி "ஐயனே! இம் மாதிரி நடப்பது இன்று புதிதல்ல. இதுபோல நான் பல்லாயிரம் தரம் பார்த்த பிறகே தங்களிடம் கூறினேன். இந்த அயோக்யனின் செய்கையை அனேகமாக இந்த காரியாலயத்தில் பலரும் கவனித்து விட்டார்களென்றே நினைக்கிறேன்.

ஏனெனில் தொழிலாளர்கள் இந்த அக்ரமக்காரரின் அனியா யத்தை அறியாமல் தங்கள் உத்தமமான குழந்தையைப் பற்றி நிந்தையாயும், அவதூறுயும் பேசக் கேட்டு என்னுயிர் துடிக்கிறது. இப் பாதகனல் தங்கள் குடும்பத்திற்கும், குழந்தைக்கும் ஹானி ஏற்படுவதென்றுல் அது சகிக்கக்கூடியதா! பிச்சைக்காரப் பயல். இவன் நடத்தையை இனியாவது தெரிந்துகொண்டீர்களா!" என்று மெல்ல வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோலக் கூறினுன்.

ஏற்கெனவே கரைந்துகொண்டே வந்த தர்மலிங்கத்தின் மனம் இன்று கடிதங்களைக் கண்டதும்—இக் காட்சியைக் கண்டதும்— அபாரமாகப் பற்றி எரியவாரம்பித்தது. தன் குடும்பத்தின் கவுரவத்

திற்கு இத்தகைய விபரீதம் ஏற்பட்டுவிட்டதை எண்ணிக் கண்கள் சிவந்தன; கோபம் தலைக்கேறிவிட்டது. இவர்கள் பேசுவது இன்னதென்று செவியில் விழவில்லை எனினும் மனம் பொறுக்காத ஆத்திரம் பொங்கிவிட்டதால் தடதட வென்று நேரே உள்ளே வந்து ராஜத்தின் கையைப் பிடித்திழுத்து பல்லைக் கடித்துக் கொண்டே தடதடவென்று பின் பக்கம் தள்ளி, மற்றொரு கையால் மோஹனை "வெளியே போ" என்று சுட்டிக் காட்டினார். இந்த பயங்கரமான காட்சியைக் கண்டு அப்படியே நடுக்கலும் திகிலும் பிடித்துப் போய் ஏதோ பெரிய விபரீதம் நடக்கப்போகிறது என்று எண்ணி மோஹன் நிலை கலங்கி, ப்ரமித்துச் செய்வதறியாது திகைத்து நின்றான்

10-வது அதிகாரம்

வறுமையின் ஆட்சியில் வருந்திடும் உயிர்கள்

உலகத்தில் மக்களுக்கு மதிப்பேற்படுவதற்கு முக்கியமாக மூன்று காரணங்கள் உண்டு. ஒன்று அபாரமான செல்வம். மற்றொன்று தனது சொந்த புத்தியினாலோ, வித்தையினாலோ, செய்கையினாலோ உண்டாகும் உயர்வு. பின்னொன்று தடபுடலான படாடோபம், ஆடம்பரம், அட்டகாஸம் முதலியன. இம் மூன்றும் இல்லையெனில் அவர்கள் ஆணாயினும், பெண்ணாயினும் அவர்களை மதிப்போர் யாரிருக்கிறார்கள்?

மேற்குறித்த மூன்று அம்சங்களிலும் சேராத பேதை கல்யாணியம்மாளை தர்ம ஆஸ்பத்திரி என்று பெயரானாலும் கவனித்து உபசரித்து மருந்து போடுகிறவர்கள் யாராவதுண்டா! ப்ரதி தினம் சுமார் ஒரு மைல் தூரத்திலுள்ள கண்ணாஸ்பத்திரிக்கு 7 மணிக்கே கிளம்பி மெல்ல நடந்து சென்றால் சுமார் 8 மணிக்குப் போய்ச் சேருவாள். 8 மணி முதல் சீட்டை வைத்துக்கொண்டு காத்திருந்து 11 மணி சுமாருக்குக் கண்ணுக்கு மருந்து போட்டனுப்புவதும் சில சமயம் அரிதாகிவிடும். அதற்குமேல் கண்ணில் எரிச்சலும் உபத்திரவமும் பாதிக்க வெயிலின் கொடுமை தாங்கமாட்டாது தவித்தவாறு 1 மணி சுமாருக்கு வீட்டிற்கு வந்ததும் உடம்பே தெரியாது களைப்பு மேலிட்டு விடும்.

அந்த அலுப்பும், களைப்பும் மேலிட்டால் படுத்துக் கிடக்கும் கிழப் பிராணனுக்கு உபசரித்து ஒரு வேளை அன்னம் படைப்பவர் யாரிருக்கிறார்கள். மோஹன் காரியாலயத்துக்குப் போய் விட்டால் மாலை 6-மணிக்குத்தான் வீடு திரும்புவான். அதன்பிறகு இராவேளை சமையல் செய்து தாயாருக்குப் பரிவுடன் போஜனமிட்டு உபசரிப்பான்.

காலையில் சமையல் செய்து மூடி வைத்துவிட்டுச் செல்வதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாமையினால் மிக்க வருத்தமுற்றுத் தவிப்பான். தள்ளாத வயதில் இத்தகைய கண் பாதையுடன்

நடந்து செல்லும் கஷ்டத்தை இவனால் கண்டு சகிக்க முடியவே இல்லை. வண்டி வைத்து அனுப்பலாமென்றாலும் தினம் போக வர குறைந்தது—மாட்டு வண்டியாயினும்—8 அணா வாங்கி விடுவான். மாதம் 15 ரூபாயிக்கு இவன் என்ன செய்வான். இதே ஏக்கங் கொண்டு தன் தாயின் கண் பாதை எப்போது நீங்கும் என்று கடவுளை ப்ரார்த்தித்துக்கொண்டே இருப்பான். ஒருநாள் "அம்மா! ஆஸ்பத்திரியில் வைத்தியர் என்ன சொல்லுகிறார்? எத்தனை நாளில் குணமாகும் என்று கூறுகிறார்?" என்றான்.

கல்யா.—அப்பா! வைத்தியர்களைக் கேட்கவும் இதமாக பதில் சொல்லவும் அத்தனை நயசுபாவத்துடன் இருக்கிறார்களா! அதிலும் நான் ஓர் பிச்சைக்காரி. அனாதைப் பிணம்போலச் செல்பவள். என்னை மதித்து பதிலும் கூறுவார்களா? கேட்டில் தலைவிதியோ என்று சீட்டை வைத்துக்கொண்டு காத்திருந்தால் தயவு பிறக்கும் போது கூப்பிடுவதும், ஏதோ ஒரு மருந்தை தடபுடல் அட்டகாஸத்துடனேயே கண்ணில் கொட்டுவதும் சிலரை மிரட்டியும் திட்டியும் அடித்தும் விடுகிறார்கள். அந்த நிலைமையில் ஏதாவது கேட்டால் சிள்ளென்று சீறி விழுந்து அனுப்பிவிடுகிறார்கள். இத்தகைய வைபவத்தில் ஆஸ்பத்திரி நடக்கிறது.

மோஹன்! ஏழைகளுக்குத் தர்ம ஆஸ்பத்திரி என்று பெயரேயல்லாது எத்தனை பணக்காரர்கள், எத்தனை சீமாட்டிகள் வந்து வைத்தியம் செய்துகொள்கிறார்கள் தெரியுமா! கேட்டுக் காப்போன் முதல் மருந்து கொடுக்கும் வைத்தியர் வரையில் உள்ள சிப்பந்திகளுக்கெல்லாம் லஞ்சத்தைக் கொடுப்பவர்களுக்குத்தான் தடபுடல் விசாரணைகள், உபசரிப்புகள் எல்லாம் நடக்கின்றன. என் போன்ற ஏழைப் பரதேசிகள் நூற்றுக் கணக்கில் உட்கார்ந்து கூவிக்கொண்டிருந்தாலும் கேள்வி முறையே இல்லை. "சத்தம் போடாதீங்க. தொரை வர்றாரு பத்திரம்." என்று பெரிய தர்ம கூச்சல் போட்டு சேவகர்கள் அட்டகாசம் செய்கிறார்கள். இதற்கு மேல் ஏழைகள் என்ன செய்ய முடியும். இதுதான் விதி; இதுதான் நீதி என்று பேசாமல் கிடக்கிறோம். எந்த மருந்து போடுகிறார்களோ என்ன செய்கிறார்களோ கேள்வி முறை ஏது? தினம் கண் பாதையுடன் வெய்யிலில் இரண்டு மைல் தூரம் நடக்கவே முடியவில்லை யப்பா! இனிமேல் கடவுள் விட்ட வழியாகட்டும். பேசாது இருந்துவிடலாம் என்றுதான் எண்ணுகிறேன். என்ன செய்வேன்?—என்று சலிப்பாகக் கூறி வருந்தினாள்.

இது கேட்ட மோஹனின் மனம் உருகியது. என் செய்வான் பாவம் "அம்மா! நாளை நான் வேறு ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்கிறேன். அங்கு என்ன சொல்லுகிறார்களோ பார்க்கலாம்"

என்று தாயாருக்குத் தேறுதல் கூறினன். அதே கவலேயும் மன வேதனேயுங்கொண்டு தவித்தவாறு தன் காரியாலயத்திற்கு வந்தான். ராஜத்தைச் சந்தித்துப் பேசுகையில்தான் அவள் பிதா ஆக்ரோஷத் துடன் வந்துவிட்டார்.

நடுநடுங்கிப் போய் எழுந்து ஒரு புறம் ஒதுங்கி நின்றான் ராஜத்தை அவர் இழுத்து உள்புறம் தள்ளி, கதவை தாளிட்டுக் கொண்டு வந்து மீண்டும் மோஹனனே தனது ஆத்திரத்துடன் ஒரு கோபப் பார்வை பார்த்து "வெளியே போ: இங்கு நிற்காதே! ஊம்.... நட...நட...என்று சற்றும் தாக்ஷிண்யமின்றி வெடுக்கென உரைத் துக் கையை வெளிப்புறம் காட்டினர்.

இன்னிலேமையில் மோஹன் என்ன செய்ய முடியும், சொல்ல முடியும்...இமை கொட்டும் நேரம் தியங்கினன். "எஜமான்!" என்று ஆரம்பித்தான். இதற்குள் தர்மலிங்கம் கட்டு மீறிய கடுங் கோபத்துடன் "போதும் : போதும் : நயவஞ்சகத் துரோகி : மித்திர த்ரோகி...ஊம்...போ வெளியே ! போ ! போ !" என்று இன்னும் வாயில் வந்தபடி எல்லாம் திட்டினர்.

மகா மானமுள்ளவனும், யோக்யனுமான மோகனுக்கு ஆகா யமும் பூமியும் ஒன்ருகி விட்டன. அவனல் இந்த அவமானத்தை யும் அபகீர்த்தியையும் சகிக்கவே முடியவில்லே. இத்தனேக்கும் வேர்ப்புழுகு நாகலிங்கந்தான் என்று மனதில் தெட்டெனப் பட்டது. வாயைத் திறக்கவில்லே. கண்ணீர் மளமளவென்று வந்து விட்டது. உடனே தலே குனிந்தபடியே கைகூப்பிய வண்ணம் வெளியே போய்விட்டான்.

அந்தோ ! பரிதாபம் ! அச்சமயம் அவனுடைய மனே நிலேமை எங்ஙனமிருக்கும், எப்படித் தவிக்கும்? எந்த எஜமானரிடம் அபார மான நம்பிக்கையும் மதிப்பும் பெற்ருனே, அதே எஜமானரிடம் இப்போது இத்தகைய இழிவான பெயரும் பெற்று அவரே அடித் துத் துரத்துவதுபோல துரத்தவும் நேர்ந்துவிட்டதென்ருல் இந்த துக்கத்தை எப்படித்தான் சகிக்க முடியும்?

தன்னேயே மறந்துக் கதறியபடியே நடக்க வாரம்பித்தான். வீட்டில் தாயாரின் பரிதாபகரமான நிலேமை யொருபுறம் வதைக் கும் தருணம் கனவிலும் எதிர் நோக்காத இடி இடித்தது போன்ற இச்சம்பவத்தினல் மோகன் அப்படியே நிலே கலங்கிப்போய் ஏதோ நடைச் சவம்போல் நடந்து வந்து வீட்டை யடைந்தான்.

தன்னுடைய தாயாரின் கேவலமான நிலேமையில் இந்த சம்ப

வத்தை எப்படிக் கூறுகிறது. இதைக் கேட்டதும் அவனுடைய விசனம் அதிகரித்துவிடும் என்று தன் மாறுதலை எத்தனையோ சிரமப்பட்டு அடக்கிக்கொண்டும் அவனால் சகிக்கக்கூடாத பரம சங்கடத்தை உண்டாக்கி விட்டது. தாயாரைப் பார்க்கிறான்; தன்னுடைய நிலைமையை எண்ணுகிறான். இனிமேல் தனக்கு அக்காரியாலயத்தில் வேலை கிடைப்பதும் சந்தேகந்தான் என்றும் அவனுக்கே தெரிந்துவிட்டது. சொல்ல வியலாத வேதனையுடன் தத்தளித்தபடியே தாயாரின் பணிவிடைகளைச் செய்தான்.

மறுநாள் அவளை வேறு ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்வதாகச் சொல்லிவிட்டான்; அதை நிறைவேற்ற வேண்டும். என்ன செய்வான் பாவம்! இரவு முற்றும் பித்தன்போல தவித்துப் புரளுகிறான். தன் பொருட்டு அந்தப் பெண்ணுக்கு என்ன இம்சைகள் நேரிடுமோ! களங்கமற்ற காரிகையின் மனம் நோகும்படி என்ன திட்டுகிறாரோ! என்ன சொல்லுகிறாரோ தெரியவில்லையே!'' என்றெல்லாம் பலவாறு எண்ணமிட்ட வண்ணம் இரவை யோட்டினான். மறு தினம் வழக்கம்போல காரியாலயத்திற்குச் செல்வதா, வேண்டாமா! என்று குழம்பிக்கொண்டிருக்கையில் காரியாலயத்து வேலைக்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். கடிதத்தைக் கண்டதுமே மனமிடிந்து நடுங்கியவாறே அதை படிக்கத் தொடங்கினான்.

"அயோக்கிய சிகாமணியே!

கொள்ளிக்கட்டையால் தலையைச் சொறிந்து கொள்வதேபோல என் மடத்தனத்தினால் உனக்கு உயரிய உதவி ஆசிரியர் பதவியையுங் கொடுத்து உன்னை என் காரியாலயத்தில் வைத்துக் கொண்டதற்குப் பலன் போதும். என் குடும்பத்திற்கு அவமானத்தையும் மாறாத களங்கத்தையும் உண்டாக்கத் துணிந்ததோடு பல வருடங்களாக நாடெங்கும் நற்கியாதி பெற்று ஓங்கி வளரும் பத்திரிக்கையின் மதிப்பையும் குலைக்கும் முறையில் உன் அக்கிரமச் செய்கை யமைந்தது என் மானம் போகும் நிலைமைக்கு வந்துவிட்டது. புத்திசாலி என்று எண்ணி ஏமாந்த என் மடத்தனத்தை உணர்ந்தேன். இனி நீ இக்காரியாலயத்தின் பக்கம் திரும்ப வேண்டாம். நீ செய்த அனியாயத்திற்காக உன் சம்பளம் பிடிக்கப்பட்டது.

தர்மலிங்கம்."

இதைப் படித்த உடனே மூர்ச்சை போட்டவன்போலாகி விட்டான். "அடடா! இத்தகைய முடிவையா அளித்தாய் ஈசா!

என்ன கொடிய பாணங்கள் போன்ற வார்த்தைகள். சீச்சீ! ஒரு விதமான தீங்கும் கனவிலும் நினையாதிருக்கையில் அனியாயமான அபாண்ட பழி நம் தலையில் வடிந்ததே! அனியாய உலகமே! இப்படியா என் விதி யமைந்தது?'' என்று கண்ணீர் விட்டுக் கலங்கித் தவிக்கிறான்.

இன்று ஏன் ஆபீஸுக்குப் போகவில்லை என்று தாயார் கேட்டால் என்ன பதில் சொல்வது? இது பரியந்தம் ஒருநாளும் ஒருவிஷயத்திலும் பொய்யே சொல்லியறியா நான் இந்த விஷயத்தில் அவளுடைய நோய்வாய்ப்பட்டுத் தள்ளாடும் நிலைமையில் பொய் சொல்லி ஏமாற்றுவது மகா கொடிய பாதகம். உண்மையை உரைத்தாலோ அவள் என்னால் எதிர்பார்த்துக் கோட்டைகட்டும் கட்டிடம் இடிந்து போய் அவள் நிலைமையே மாறிவிடும். என்ன செய்வேன்? தர்ம சங்கடமாகி விட்டதே!'' என்று வெகு நேரம் தவித்தான்.

கல்யாணியம்மாள் "ஏன் இன்று வேலைக்குப் போகவில்லை?'' என்று இவன் எதிர்பார்த்தபடியே கேட்டாள். மோஹன் 'எந்த காரியத்திலும் சத்தியமும் உண்மையும்' உதவி புரிவது போல அசத்தியமும் பொய்யும் உதவாது என்ற உயர்ந்த கருத்தைக் கடைபிடித்து ஒழுகுபவன். ஆதலால் மனதை தைரியப்படுத்திக் கொண்டு "அம்மா! இன்று முதல் என்னை வேலைக்கு வரவேண்டாமென்று அதிகாரி கூறிவிட்டார். என் வேலை அவருக்குப் பிடிக்கவில்லையாம். எல்லாம் காலத்தின் கோலம். வருந்தாதே! இப்படி காட்டிய கடவுள் இன்னொரு வழியைக் காட்டாது இருக்கமாட்டார். என்ன செய்யலாம்?'' என்று வேதாந்தமாகவே கூறினான்.

இதைக் கேட்ட கல்யாணியம்மாளுக்கு மிக்க வருத்தமதிகரித்து விட்டது. இனி என்ன செய்து என்ன பயன். சற்று நேரம்விசனித்தாள்.எல்லாம் தன்னுடைய துரதிருஷ்டந்தான் என்று மனம்நொந்து கொண்டாள். கண்ணின் பாதையோ நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. கண்ணைத் திறக்கவும் கூடாமல் போய்விட்டது.

மோஹன் வேலைக்காக ஒரு புறம் அலைந்தவாறு தாயாரையும் கவனித்து வருவதை விரதமாகக் கொண்டான்.தாயாரின் பாதையை நீக்கி அவளைக் காப்பதைவிடத் தனக்கு ஒன்றும் சிறந்ததல்லவென்று தோன்றிவிட்டது. வேறு ஒரு ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றான். அங்குள்ள வைத்தியர் கண்ணைப் பரீக்ஷித்துப் பார்த்துவிட்டு "இது பெரிய ஆபத்தான கேஸாகும். இதை இந்த சாதாரண வைத்தியர் பார்த்தால் தீராது. பெரிய கண் வைத்திய

ராகிய நாராயணன் என்பவரிடம் காட்டுங்கள். உடனே காட்டினல் தான் குணமாகலாம், இல்லையேல் கண்ணே போய்விடும்'' என்று காபுரா செய்துவிட்டார்.

இதைக் கேட்டதும் மோஹனனுக்கு தூக்கி வாரிப்போட்டது. எத்தகைய மனிதருக்கும் ப்ரதான அங்கம் கண்ணல்லவா? அத்தகைய கண்ணிற்கு பங்கம் வந்தால் என்ன செய்வது?ஈசா! என் தாயாரின் கண்ணைக் கொடுத்துக் காக்கவேண்டும். என்னுடைய பல கஷ்டத்தின் மத்தியில் இந்த சோதனையாவது செய்யாது காத்தருள்வாய் என்று கடவுளை எல்லாம் வேண்டித் தொழுதபடியே மறுதினமே பெரிய டாக்டரிடம் கல்யாணியம்மாளை அழைத்துச் சென்றான்.

கடவுள் வரங் கொடுத்தாலும் பூசாரி வரங் கொடார் என்பது போல பெரிய டாக்டரைப் பார்க்கப்போவதற்கு முன்பு வெளியிலிருக்கும், குட்டி டாக்டர்களுக்கும் முதலில் சொர்ண புஷ்பம் சமர்பிக்க வேண்டுமென்றதை யறியாத மோஹனன் இந்த அனியாயத்தைக் கேள்வியுற்றதும் பின்னும் இடிவிழுந்து போய்விட்டான்.

அங்குள்ள சிறிய வைத்தியரிடம் கெஞ்சிக் கூத்தாடி கேட்டதில் அவர் சற்று மனமிரங்கி "அப்பா! நீ ஏழை, பரதேசி என்று கூறுவதால் நான் உன்னை விட்டுவிட்டாலும் எனக்கு மேலே இன்னொரு வைத்தியர் இருக்கிறார். அவருக்கு குறைந்தது 20 ரூபாயாவது தக்ஷிணைக் கொடுக்காமல் பெரிய வைத்தியரிடம் போக உத்திரவே கிடைக்காது. அதோடு இந்த மாதிரியான ஸீரியஸ் கேஸ், ஆபரேஷன் கேஸுகளுக்கு பெரிய வைத்தியர் குறைந்தது 100 ரூபாய் நோட்டு இல்லாமல் கையை வைக்கும் வழக்கமே இல்லை. பணக்காரராயிருந்தால் ஆயிரக் கணக்கில் வாங்குவார். ஆகையினல் அவர் வைத்தியம் செய்யவேண்டுமென்றால் கையில் மூட்டையை வைத்துக்கொண்டால்தான் முடியும்'' என்று கூறிவிட்டு அவரே கல்யாணியம்மாளைப் பரிசோதித்துப் பார்த்து பிறகு "ஐயா! இந்த கேஸை வேறு யாராலும் குணப்படுத்துவ தென்பது கனவிலும் முடியாத காரியம். அதற்குத் தகுந்தவர் அவர் ஒருவர்தான். உடனே செய்யாவிட்டால் கண் போவதுடன் மூளை நரம்புகளும் கெட்டு கோளாறு ஏற்படும். என்ன செய்வது? தகுந்த ஏற்பாட்டுடன் வாரும் என்று கண்டிப்பாய் கூறிவிட்டுத் தன் வேலையை கவனிக்கப் போய்விட்டார்.

இதுகேட்ட மோஹன் என்ன செய்வான் பாவம்! விசனமோ தாங்க முடியவில்லை. எத்தனையோ கெஞ்சியும் மன்றாடியும் பார்த்தும் ஒன்றும் பலிதமடையவில்லை. கண் கலங்கியபடியே தன்

தாயாரை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தான். கல்யாணியம்மாளும் இவ்விஷயங்கள் முற்றும் தெரிந்து மிக்க விசனப்பட்டுத் தவிக்கிறாள்.

தாயின் அன்பிற்கு அவள் கண்களை சரியாகச் செய்வது தற்போது தனயனின் கடமை யாக விருக்கிறது. தனக்கோ கையில் காலணா இல்லை. ஆபரேஷனுக்கு 100 ரூபாய் மற்ற செலவுகளுக்கு 100 ரூபாய் ஆக இருநூறு ரூபாய்க்குத தான் என்னசெய்வது? என்று சகிக்கக்கூடாத விசனத் துடன் தன் தாயின் பக்கலில் உட்கார்ந்து அவள் கையைப் பிடித் துத் தடவிக்கொண்டே புலம்புகிறான்.

“அந்தோ! நம் போதாக் காலத்திற்கன்றோ நாகலிங்கம் ஒரு கொடும்பாவியாகத் தோன்றினான். அவனுடைய கொடிய விஷமத்தனமில்லையேல் எனக்கு இச்சமயம் ராஜலக்ஷ்மியே உதவி புரிவாளன்றோ! தர்மலிங்கமே உதவி புரிவாரன்றோ! அந்தோ! துர்பாக்கியமே!” என்று ராஜத்தை எண்ணிக் கலங்கும்போது அவளது அழகிய பிம்பம் உருவெளித் தோற்றம்போலத் தெரிகிறது. தத்தளித்த மனத்துடன், செய்வதறியாது மிக்க விசனத்துடன் இடிந்துபோய் உட்கார்ந்து விட்டான்.

182989

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல்கள்.

26½ ரூபாய்க்கு 31 நாவல்கள்.

"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை.

	ரூ.	அ.	ரூ.	அ.
வைதேகி (2 பாகங்கள்)	2	8	2	0.
ராதாமணி (2 பாகங்கள்)	2	8	2	0
சாருலோசனா (2 பாகங்கள்)	2	8	2	0
பத்மசுந்தரன்	2	8	2	0
காதலின் கனி	2	8	2	0
நவநீதகிருஷ்ணன்	2	0	1	12
ருக்மிணீகாந்தன்	2	0	1	12
சாமளநாதன்	2	0	1	12
தியாகக்கொடி	2	0	1	12
மங்களபாரதி	2	0	1	12
சண்பகவிஜயம்	1	12	1	8
கௌரீமுகுந்தன்	1	12	1	8
ஸாரமதி	1	12	1	8
சோதனையின் கொடுமை	1	8	1	4
பரிமளகேசவன்	1	4	1	0
உத்தமசீலன்	1	4	1	0
சுகந்தபுஷ்பம்	1	0	0	14
கதம்பமாலை	1	0	0	14
கோபாலரத்னம்	0	14	0	12
புத்தியே புதையல்	0	14	0	12
பட்டமோ பட்டம்	0	10	0	8
நளினசேகரன்	0	8	0	6
வீரவஸந்தா	0	8	0	6
மூன்று வைரங்கள்	0	8	0	6
படாடோபத்தின் பரிபவம்	0	8	0	6
பிச்சைக்காரக் குடும்பம்	0	8	0	6
ஆனந்தஸாகர்	0	8	0	6
பக்ஷமாலிகா	0	6		
ஜயஸஞ்சீவி	0	4		
சுகுணபூஷணம்	0	4		
அம்ருததாரா	0	4		

ரூ. 5-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் மொத்த விலையில் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினால் தபாற் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, கோடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

Devi Press, Madras

தலை வலிக்கு

Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்

இருதயக் கோளாறுகளையும்

விலக்குங்கள்

அம்ருதாஞ்சனை

உபயோகியுங்கள்

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை • கல்கத்தா பம்பாய்.